ஞாயிறு வெளியீடு. விலை 0—1—3. REGD. No. M. 4642.

# திராவிடநாடு

மலர் 3. 11—3—45 இதழ் 50.

## இங்கேயும் பெண்மை!

நாட்டினில் மக்கள் நலம் பெறவே—மேலை
நாடெங்கும் கல்விபயின்று வாரார்
வீட்டுக் குள்ளிருந்த பெண்களெல்லாம்
இன்று வேகமாய் நந்நிலை அடைந்துவாரார்.

யந்திரம் பூட்டவும் பிரிக்கவும் கற்றுமே
ஆகாயக் கப்பலும் ஓட்டுகின்றார்—இங்கு
தாலாட்டு-ஒப்பாரி கற்றுவிட்டு
சதிராட்டமும் கற்றுமே தேறிவிட்டார்

அடுப்பூதும் பெண்கள் அறிவிலிகள் என்றும்
அடிமைத் தொழில் செய்யப்பிறந்தா ரென்றார்.
கலியாணமாகி பிள்ளை பெறமட்டிலும்
கடவுளுண்டாக்கினர் என்றுரைத்தார்.

அறிவுள்ள ஆண்மட்டும் கல்விகற்று—மக்கள்
அடிமையும் நீங்கிற்றோ தேன்குயிலே
பெண்கள் அறிவு மேலோங்கி வளர்ந்தாலன்றி—மக்கள்
பேதமை நீங்காது மாங்குயிலே.

காதிலும் மூக்கிலும் ஓட்டையிட்டு—காதை
கண்டமட்டிலுமே தொங்கவிட்டு
வேதனை செய்திடும் வீரமெல்லாம்—உயர்
வேதம்பிறந்த நம்நாட்டிலே தான்.

பெண்களைப் பேதையராக்கிவிட்டு—மூட
பித்தத்தை மூளையிலேற்றிவிட்டு
கற்பனைக்கதை யெல்லாம் நம்பவிட்டு—அறிவுக்
கண்களை குருடுமாக்கிவிட்டார்.

**ஜி. எம். ராஜையா**

* பாளையங்கோட்டை, பாளையம்பச்சேரி நகராட்சிப் பாடசாலையில், 9-2-45ல் நடந்த ஆண்டுவிழாவில் மாணவிகளால் நடிப்புடன பாடப்பெற்றது.

# ★ உவமை நயம் ★

'வல்லிக் கண்ணன்'

*புரட்சிக்கவிஞர், பாரதிதாசன் அவர்களின் புகழ்மணம் தமிழகத்திலே, எங்கணும்கமழுகிறது. அவருடைய, கவித்திறமைபற்றி, அவருடைய தாக்குதலுக்கு ஆளாகும் ஆரியத்தின் அணைப்பிலே இருக்கும் "பேர்வழிகளுங்கூட" போற்றாமலிருக்க முடியாது! ஒப்பற்ற நமது கவியின், சிறப்பினை உணர்ந்த தமிழகம், அவருக்கு "அன்புமலர்" சூட்டிஅகமகிழ வேண்டியது முற்றிலும் முறையே. இதற்காகக், கவிஞருக்கு ஒரு பணமுடிப்புத் தருவதென்று ஓர் சீரிய ஏற்பாடு நடைபெற்றுவருகிறது. தலைவர்பெரியார், தோழர்கள் S. இராமநாதன், டாக்டர் A. கிருஷ்ணசாமி ஆகியோரைக் கொண்ட குழுஅமைக்கும்வேலையும் துரிதமாக நடந்தேறிவருவது கேட்டு மகிழ்வடைகிறோம்.*

*இனத்தின் எழுச்சிக்குழைக்கும் இக்கவிஞருக்கு, வழங்கப்பட்டுள்ள எண்ணற்ற சிறப்புரைகளிலே, ஈண்டு, ஓர்பகுதி, வெளியிடப்படுகிறது.*

தற்காலத் தமிழ்க் கவிஞர்களிலே தலைசிறந்தவர் பாரதி தாசன். ஜீவன் துள்ளும் அவரது கவிதையில் புதுமை இருக்கிறது 'புரட்சி மின் வெட்டுகிறது இனிமை சிலு சிலுக்கிறது. கருத்துச்செறிவும் காவிய நயமும், கவிதைக்கனலும் புதுமையுடன் கலந்து மிளிரும் பாரதிதாசன் கவிதைகளில் உவமை நயம் மலர்ந்து கிடக்கிறது. 'உவமையில்புதுமையாவது? அப்படி யென்றால்?' எனக்கேட்கிறவர்களுக்கு நான் சொல்லும் பதில் 'பாரதிதாசனைப் படியுங்கள்!' என்பதுதான். விழிப்புற்று எழுகின்ற புதுயுகத்தின்வீரப் பிரதிநிதியாகத்தலைநிமிர்ந்து நிற்கும் புரட்சிக்கவி பாரதிதாசன் அனாயாசமாக உவமைகளை உதிர்க்கின்றார் ஆங்காங்கே. எதானாலும் சரிதான். மங்கையர்வனப்பு காதல் இன்பம், இயற்கை எழில், பாட்டாளிப்பொறுமல்—சகல கோணங்களிலும் அவர் பார்வை படும்பொழுது உவமை மின்வெட்டுப்போலத் தெரிகிறது. அவ்வளவும் சுத்தச் சுதேசி.

தமது இலக்கியத்திலேஅன்னம்போல் மென்னடையாளையும், திருவைப் பழிக்கும் சிங்காரியையும், மன்மதன் கண்டு காமுறும் கன்னியரையுமே பார்த்துப் பார்த்துக் கண் பூத்துப் போயிருக்கும் பொழுது 'சிப்பம்பிரித்தெடுத்தசீனத்துப் பொம்மை' 'கலைக்காத சாத்துபடிச்சிலையைப்போல்' 'படிகத்துப்பாவை' என்ற அற்புதமான சொற்களைக் கண்டால்ரசிக உள்ளம் களிக்காமல் இருக்குமா?

'கிளியே மயிலே' என்று கொஞ்சிய கவிக் காதலன் வாயில்எடி! வடிவத்தின் ஆதிக்கமே!' என்ற விழிப்புப்பிறந்தால் அதில் உள்ள புதுமையை வியக்காமல் இருக்கமுடியுமா?

முத்தும் முல்லையும் என்ன பாவம்செய்தனவோ,—அல்லது புண்ணியந்தானோ!- அவை மெல்லியலாரின் பல்முன்னிலையிலே வெட்கித் தலைகுனிகின்றன. கவிதையில்தான். ஏனெனில் எடுத்தஉடனேயே 'முத்தைப் பழிக்கும் பல்' முல்லையைநாணச் செய்யும் முறுவல்' என்றுதானே உவமை பிறக்கிறது. நமது காவியக்காரர்களுக்கு உவமைக்கு வேறுபொருள் அகப்படவில்லையோ; அல்லது சோம்பல் காரணமாகக்கற்பனைப்புரவியைப்பள்ளம் விழுந்த பழஞ்சுவட்டிலேயே மெதுநடை நடக்கவிட்டார்களோ தெரியவில்லை அதனால் இலக்கியத்தில் தேக்கம் ஏற்பட்டது மட்டும் நன்கு தெரிகிறது. மங்கையின் முறுவலுக்கு முல்லையும் முத்தும் தவறினால் வேறு எதுவுமேஅகப்படவில்லையா?

இதோ! தென்னம்பாளைபிளந்து சிரித்திடும் சிரிப்புக்காரி' இதில்புதுமைஇல்லையா? எழிலுக்குக் குறைவா?

'வெண்முத்தில் நீலம் விளையாடிக் கொண்டிருக்கும் கண்கள்' 'பொன்முகத்திலே யிழைத்த புத்தம் புது நீலச்சின்ன மணிக்கண்கள்' 'ஓடைக் குளிர் மலர்ப் பார்வை' 'பழச்சுளையின் வாய்' 'அன்னத்தின் தூவி அனிச்ச மலரெடுத்துச் சின்ன உடலாகச் சித்தரித்த மெல்லியள்'—இவ்வகையிலே புது உவமைகளை விசிறுகின்ற கவிஞர் பழம் உதாரணங்களைக் கையாள்வதிலும் ஒரு தனி நயம் இருக்கிறது.

'மின்னற் குலத்தில் விளைந்ததோ?
—வான்
வில்லின் குலத்திற் பிறந்ததோ?
கன்னற் றமிழ்க்கவி வாணரின்
—உளக்
கற்பனையே உருப் பெற்றதோ?
பொன்னின் உருக்கிற் பொலிந்த
தோ—ஒரு
பூங்கொடியோ?மலர்க்கூட்டமோ?'
'தண்ணிலவும் அவள் முகமோ!
தாரகைகள் நகையோ! தளிருட
லைத்தொடும் உணர்வோ
நன் மணஞ்சேர் குளிரும்! விண்
ணீலம் கார்குழலோ!'

என்று மேலே மேலே போய்க் 'கண்டெடுத்தேன் உயிர்ப்புதையல்!........... கண்டெழுத முடியாத நறுங்கவிதை' என முத்தாய்ப்பு வைக்கும்பொழுதுயார் தான் 'ஆஹா! என வியக்காமலிருக்க முடியும்?

மேகத்திரையை நீக்கித் தலைநீட்டும் சந்திரனை எல்லோரும்தான் பார்க்கிறோம். குளித்துக் கரையேறும் அணங்கும் நம் பார்வையில் படத்தான் செய்கிறான். சர்வ சாதாரண நிகழ்ச்சிதான், ஆனால்

'முகிலைக் கிழித்து வெளிக்கிளம்
பும்—ஒரு
முழுமதிபோல, நனைந்திருக்கும்—
தன்
துகிலினைப்பற்றித் துறைக்கு
வந்தாள்'

என்று கவிஞன் சுட்டிக்காட்டும்பொழுது அதில் ஒரு இனிமைஇருக்கத்தான் செய்கிறது.

இத்தகைய அழகியை ஆணழகன் ஒருவன் காண்கிறான். சாதல் பிறக்கிறது. 'ஓருயிர் ஈருடல்' என்ற மக்கிப்போன தத்துவம் புதுமையில் எப்படி மிளிர்கிறது பாருங்கள். 'கொல்லர் காய்ச்சும் இரும்பிடை நீர்த்துளி ஆகக் கலந்திடும் இன்பம்' வெள்ளத்தினோடொருவெள்ளமாய் நல்லவீணையும் நாதமும் ஆகிவிட்டார்.

காதலருக்கிடையே எவ்வளவு தூரம் இருந்தாலென்ன? அன்புஅவர்களிடையே பாலம் அமைத்துவிடுமல்லவா? அதைநயமாக விளக்குகின்றன சில உவமைகள்:

'பழதும் இருட்டினில்
நானிருந்தேன் எதிர்
பால் நிலவாயிரம் போல்—அவள்
அழது வெளிச்சம் அடித்த
தென்மேல்'
'திங்கள் ஒரு புறமும்—மற்றைச்
செங்கதிர் ஓர் புறமும்
தங்கி யிருந்திடினும்—ஒளி
தாவுதல் உண்டது போல்—
அங்கம் பிரிந்திருந்தும்
சங்கமம் ஆவதுண்டாம்—காதற்
சமுத்திர விழிகள்!'

விழிகள் சங்கமம் ஆனால்தான் என்ன? இன்பம் அநுபவிக்க முடியவில்லை என்

(11-ம் பக்கம் பார்க்க)

# நிக்கோலஸ் தீர்ப்பு!

—(II)—

C. N. A.

தேசிய ஆர்வத்தை ஊட்டிவிடுவதனாலேயே, அடிமைத்தனத்தை ஒழித்துவிடமுடியுமென்ற எண்ணம், பலருக்கு. அன்னிய ஆட்சியை ஒழிக்க, ஆண்மை வேண்டுமே, அந்த ஆண்மையெனும் அருங்குணம், நமது மக்களிடை படிப் படியாகப் பாழ்பட்டு விட்டதே பல்வேறு காரணங்களால், அக்காரணங்கள் யாவை எனக்கண்டு, அவை போகமருந்து உட்கொண்டு, மனமாசுபோக்கிக்கொண்டாலன்றே, வெளிநாட்டவனை விரட்டும் வீரம், விவேகத்துடன்தோழமைகொண்டவீரம், தோன்ற முடியும், என்ற எண்ணம், பலருக்கு இனிப்பதில்லை. சிந்தனை என்றாலே, பலருக்குக் கஷ்டம், எனவேதான், இந்நாட்டுப் பத்திரிகைகள், தேசியக்கனலை மூட்டிவிடுவதே திருப்பணி என்று கருதுகின்றன. அந்தச் சேவை செய்வதிலே, சத்தியம், நேர்மை, யூகம், அறிவு முதலிய எதைப்பற்றியும் கவலை கொள்ளக்கூடத்தேவையில்லை, எவ்வழி சென்றேனும், காரியத்தைப் பூர்த்தி செய்து கொள்ளவேண்டும், முடிவுமுக்கியமே தவிர முறை முக்கியமல்ல என்று கருதுகிறார்கள். இது அவர் தம்கருத்துக் கோளாறு, என்று அளவோடு இருந்து விட்டால் கவலை இல்லை, இதன் பயனாக நாட்டு நலிவு, நாளாவட்டத்தில் அதிகரித்தவண்ணம் இருக்கிறது, வெளிநாட்டானுடைய பிடிபலமாகிறது.

முறைபற்றிக் கவலை வேண்டாம் என்ற கருத்துடன் காரியமாற்றும், காகிதக்கலையாளர்களை, நிக்கோலஸ் சாடினார், தக்ககாரணம் காட்டி. நேர்பத்தினால், அவர் காட்டியஉண்மையைமறந்துவிடமுடியாதல்லவா! விஷயமறியாமக்களிடை வேண்டுமானால். நிக்கோலஸ் ஒரு "நீசன்" என்று தூற்றிவைக்கலாம், ஆனால் அறிவுள்ளவர்கள் அனைவரும், உள்ளதை மறைப்பது,உருமாற்றிஉரைப்பது, இல்லாததைத் தீட்டுவது என்ற இன்ன பிறவற்றை பணியெனியாகப்பூண்டுள்ள பத்திரிகைக்காரர் ஒரு பாங்கி கண்டிக்கும் அளவு அக்ரமச்செயலிலே ஈடுபட்டுத்தானேஉள்ளனர் என்று வெட்கித்தலைகுனிகிறார்கள், வேறென்ன செய்வது. லோபியைக் கொடைவள்ளலென்றுகொண்டாடுவது, இல்லாமையினால் ஏற்பட்ட இருதயநோய்! அதுஇல்லை நிக்கோலசுக்கு. எனவே வெட்டு ஒன்று துண்டு இரண்டாக இருக்கிறது.

நிக்கோலஸ், எழுதுகிறார், "ஐயா! நான் இந்தியா சென்றேன்,இந்தியனைக் காண. அங்கு இந்தியன் இல்லையே!" என்கிறார். இந்தத்தலைமகனின் துடுக்குத்தனத்தைப்பாருங்கள்! இந்தியனைக்காணவில்லையாமே! இவன் குருடன்போலும்! இங்கே நாம், 40 கோடிக்குமேல் இருக்கிறோம், இந்தியர்கள்! நாம் அவர்கண்களுக்குத் தெரியவில்லையாமே!! என்ன ஆணவம் இந்தஆசாமிக்கு!—என்றநமது நாட்டுப்பற்றுடையார்கள், காட்டுத்தீயிலே சிக்கிக்கொண்ட புலியென உறுமுகின்றனர்.

"உங்களை எங்கேயோ பார்த்ததுபோலிருக்கிறதே? நீங்கள்............."

"எங்கே பார்த்தீர்கள். ஆரணியிலா, ஆற்காட்டிலா?"

"இல்லேங்க. கவனம் வந்தது, பொன்னேரியிலே..........."

"ஓ! நம்ம சரவணமுதலியார் மக,கலியாணத்துக்குவந்திருந்தேன். அங்கேகண்டிருப்பீர்கள்"

"ஆமாய்யா, ஆமாம்! சரவணமுதலியார் வீட்டுக்கலியாணத்திலேதான். அவருக்கு நீங்க பந்துக்கள்தானே"

"சேச்சே! நாங்க, ஆற்காட்டாராச்சே. நமக்குச் சரவணமுதலியார் பைத்துவழி, வியாபாரவகையிலே........."

"நீங்க, என்ன நாயுடுங்களா?"

"சேச்சே!முதலியார்தான். ஆற்காட்டு வகையறா. அதுவேறே, பொன்னேரி வேறே இல்லையா?"

"ஆமாம்! சிலபேர் சொல்வாங்க அது போல. முதலியார் என்றால் எல்லோரும் ஒன்றுதான் என்று பேசுவாங்க, ஆனால் எப்படி எல்லாம் ஒன்றாகும்"

"அதைச்சொல்லுங்க. தொண்டைமண்டலம், துளுவவேளாளர், நீலகட்டி, கொண்டைகட்டி, கொங்கு வேளாளர், அவத்திநேரியார், ஆலந்தூராரு, வெற்றிலைபிள்ளையாரு, வில்லிவாக்கத்தாரு,தொழில்வேளாளர்,பொன்னேரியார், பேட்டை முதலியாரு, பூந்தமல்லிக்காரர், ஆற்காட்டு வகையறா, ஆரணிமுதலிமாரு, சீயாழியார், சிதம்பரத்தார், கார்காத்தார், கொடிக்காலர் கீழ்நாட்டார். காரைக்காட்டார், சிறுகுடியார், கோட்டை வேளாளர், நான்குடியார், அரும்பூரார், திருநெல்வேலியார், திருவொற்றியூரார், குந்தமுதலியார், குன்னத்தூரார், மாங்காட்டார், மணிமங்கலத்தார், என்று எவ்வளவோ இருக்கான முதலியார்கள் உண்டு நாட்டிலே. முதலியாருன்னு எல்லாம் ஒன்று என்று எப்படிக்கூறுவது"

இது, நம்நாட்டு, உரையாடலிலே, சகஜமானது. முதலியார், என்றவகுப்பு, இங்குள்ளபலப்பலவகுப்புகளிலே ஒன்று. பெரும் பிரிவுகளிலே ஒன்று. இந்தப்பிரிவிலே, இத்தனை பிரிவுகள்! அந்திப்பழத்தைப் பிட்டுப்பார்த்தால் ஆயிரம் சிறமணிகள் இருப்பதுபோலமுதலியார் என்ற ஒரு குலத்துக்குள்ளே, இவ்வளவு! அதுபோலவே,முதலி,மூதலியார், உடையார், கவுண்டர், பிள்ளை,செட்டி, பூசாலி என்று அந்த ஒரே குலத்துக்குப்பலப்பல பட்டங்கள். இந்த ஒரு வகைக்கும் மற்றொருவகைக்கும்,சாப்பாடு, கொள்வினை கொடுப்பினை கிடையாது. ஒருவரைமற்றவர், கொஞ்சம் "மாற்றுக்குறைவு" "மட்டம்," "அப்படி இப்படிதான்" என்று பேசாவிட்டால் திருப்தி ஏற்படுவதில்லை. அதுமட்டுமா? "அவர்கள் ஆற்காட்டாருதான்,நாங்களும்ஆற்காடுதான், ஆனாலும், அவர்கள், பொன்னேரியிலே பெண் கொடுத்துவிட்டார்களே. இனி எப்படி அந்த இடத்திலேசம்பந்தத்தைத் துக்கொள்ளமுடியும்?" என்று, ஆற்காட்டாரைப்பற்றி ஆற்காட்டாரே பேசுவார். பேசிவிட்டுப் பரமதிருப்தியுமடைவார்.

பிரிவுக்குள் பிரிவு இருப்பது, முதலியார்பிரிவு ஒன்றிலேமட்டுமா என்றால், இல்லை, உனக்கு நான் என்ன மட்டமா? என்ற முறையிலேதான் இருக்கும். ஒவ்வொரு குலத்திலேயும். முதலியார்,நாயுடு பிள்ளை, செட்டியார், நாயகர், கள்ளர், மறவர், தேவர், என்ற இன்னபிற! இவைகளேயன்றி, கப்பு, கம்மா, வெலமா, ரெட்டி,பலிஜா,பந்துஎன்ற பல ஆந்திரத்தில், நம்பூதிரி, நாயர், ஈழவர், தீயர், புலையர், நாயாடி என்ற பல வகுப்புப் பிரிவினைகள் கேரளத்தில், வடநாட்டிலே பலப்பல; இவ்வளவும் ஒரே பட்டியிலே சேரும். இந்து என்ற ஒரே பட்டியில்! இந்து ஒருதனி, பெரியபிரிவு, அதுபோல முஸ்லீம், கிருஸ்தவர், பார்சி சீக்கியர், என்றுபல பிரிவுகள்! இந்தநிலையிலே இருக்கும் இடம், 'இந்தியா.'' என்னித்தொலைக்க முடியாத ஜாதிகள்! ஒன்றுக்கொன்று தொன்றுதொட்டு பேதங்கள்! அந்தப்பேதங்களை மக்கள் மனதை விட்டுப்போகமுடியாதபடி இருக்கச் செய்ய, இதிகாச புராணாதிகள்! ஒன்றை ஒன்று தாழ்த்திப்பேசவும், குறைவாக மதிக்கவும்,குத்தலாகப்பேசவும், தூண்டிவிடும் குலபுராணங்கள்! இதுதான் இந்தியா! இங்கே ஆற்காட்டு முதலியார் உண்டு, அனந்தபூர் கப்பு உண்டு, பாலக்காட்டு நம்பூதிரியும், பழைய கோட்டைக் கவுண்டரும்,திருச்சித்தேவரும், திருநெல்வேலிப்பிள்ளையும், மைசூர்உடையாரும்.

(4-ம் பக்கம் பார்க்க)

## நிகோலஸ் தீர்ப்பு!

3-ம் பக்கத் தொடர்ச்சி

மங்களூர் ஷெட்டியும், மாரிக்குப்பம் ஆதிதிராவிடரும் மகாராஷ்டிரத்துப் பண்டிட்ஜீயும், வங்கத்துக்குப்தாவும், பூரி ஒரியாவும், பஞ்சாலத்துச் சீக்கியனும், கோலாப்பூர் மராட்டியனும், கொங்கணத்து ஐயனும், பீகாரின் ஆதிவாசியும், அசாம் ஆதி குடியும், ஆக்ரா முஸ்லீமும், பம்பாய் பனியாவும், குஜராத்துச்சேட்டும், ராஜபுத்திரரும், பார்சியும், கிருஸ்தவரும் பிறரும் உண்டு. அவரவர்கள், உள்ளூர என்னுவது, தாம் எந்த "உட்பிரிவு" என்பதன்றி வேறல்ல. அந்தந்த உட்பிரிவு, வேறு உட்பிரிவினால் உயர்வானது என்றோ, தமக்குச்சமமானது என்றோ கருதவது கிடையாது. கருதமுடியாதபடி, கருத்துவளர, வழிகள் உள்ளன! இது இந்தியா! உலகிலே மற்ற இடங்களிலே போனால், இப்படி இராது. ஜெர்மனியிலே போனால் ஜெர்மானியன் இருப்பான். பிரான்சுபோனால்பிரான்சுக்காரனைக்காணலாம். இத்தாலிபோனால் இத்தாலியனைக்காணலாம். இங்கேவந்தால், இந்துவையோ, முஸ்லீமையோ, கிருஸ்துவரையோ, சீக்கியரையோ, பார்சியையோ காணலாம்! அதுமட்டுமா? இந்துவிலே எண்ணாயிரம் பிரிவு! ஆகவே இங்கு, முதலியாரையோ, முல்ட்டானியையோ, சர்மாவையோ, குப்தாவையோ காணமுடியுமே தவிர, இந்தியன் என்ற ஒரு ஆளைக்காணமுடியாது.

தாங்கள்யார்? என்றகேள்விக்கு நான் இந்தியன் என்றபதில் இங்கே பொருந்தாது—பொருள்விளங்காது: ஏனெனில் இந்தியன்என்ற ஒருஇனம் கிடையாது, எனவே தான் நிக்கோலாஸ்,நான் இந்தியா வந்தேன் இந்தியனைக்கண்டேனில்லை என்றார். உண்மைதானே, தமிழனை, வங்காளியை,, மராட்டியனை, பஞ்சாபியை, அசாமியை, மார்வாடியைக்காண முடிந்திருக்கும்! இந்து,முஸ்லீம், சிக்கியர், ஆதித்திராவிடர்,என்பவர்களைக் கண்டிருக்கமுடியும்! இந்தியனைக் கண்டிருக்கத்தான் முடியாது. மதம், மொழி இடம், இனம், எனும் பலவகையிலே, வேறுவேறாகவுள்ளகூட்டங்களும், அந்தக்கூட்டங்களிலே, பலஉட்பிரிவுகளும் மலிந்துகிடக்கும்இந்நாட்டிலே,எப்படி, இந்தியனைக் காணமுடியும்! எனவேதான் நிக்கோலஸ் எழுதினார், "ஐயா! இந்தியா சென்றேன் இந்தியனைக்காணவில்லை"என்று. அதற்குக்கோபித்துப்பயன்என்ன?

"தம்பி! டவுன் ஹாலிலே சகல ஏற்பாடுகளும் தயாராகிவிட்டன. வா, புறப்படுவோம். கூட்டம். நிறைந்துவிட்டிருக்கும்" என்று கூப்பிட்டார், வயோதிகர் ஒருவர், ஒருவாலிபனை. அவன் ஆச்சரியமுற்று, "டவுன்ஹாலா? அங்கென்ன அலுவல் எனக்கு" என்றுகேட்டான், வயோதிகர், "அலுவலா? அழகுதான்! என்னடா தம்பி! நான் இன்று அங்கு நடனக்கச்சேரி ஏற்படுத்தியிருப்பதை நீஅறியாயா? "என்றுகேட்டார். "அறியேன்! யார்நடனமாடப்போவது? என்று கேட்டான் வாலிபன். கொஞ்சம் கோபத்துடன் வயோதிகர், "தம்பி! விளையாடிக்கொண்டிராதே நேரமாகிறது வா. "என்று அழைத்தார், 'வருகிறேன். யார் நடனம்? அதைக்கூறுமே," என்று கேட்டான். "அதென்னப்பா விசித்திரமான கேள்விகேட்கிறாய். நீதான் நடனமாடவேற்பாடாகி இருக்கிறது "என்று வயோதிகர் சொன்னதும் வாலிபன் வயிறு குலுங்கச்சிரித்துவிட்டு. "பெரிய விகடகவி ஐயாநீர்! என்ன சொன்னீர், நான் நடனமாட வேண்டுமா? நானா! நாட்டியக்கச்சேரியா? ஐயோ, ஐயோ, இப்படியும்ஒருவேடிக்கைக்காரர்உண்டா? 'என்று கேட்டான். வயோதிகர் "தம்பி! உன்பெயர்என்ன? "என்று கேட்டார் அதிகாரக்குரலிலே. வாலிபன் 'என்பெயரா?என்பெயர் நடனசபாபதி! "என்றார். உடனே கிழவர் நடன சபாபதிஎன்று பெயர் வைத்துக்கொண்டு, நடனமாடமுடியாது என்கிறாயே, இதென்ன விந்தைஎன்றுகேட்டார். பெயருக்கேற்றபடி குணமும் மணமும், செயலும் இயல்பும் இருக்கும் என்று எண்ணிய ஏமாளியின் கோமாளித்தனத்தைக் கண்ட வாலிபன் மேலும் சிரித்தான். அதுபோல, நிக்கோலாஸ் மட்டுமல்ல, இங்கேயுள்ள சிலபாரத வீரர்கள் கூட, இந்தியன், இந்தியன் என்று கூறிவருகிறார்கள், குறிப்பற்ற பொருளற்ற முறையிலே அதைப்பொருளுள்ளதாகக் கருதி. 'எங்கே இந்தியன் அவனைநான் பார்க்கவேண்டும்! என்று தேடினால், நிச்சயமாக நிக்கோலாஸ் போலவே, எவரும், ஏமாறவேண்டியதுதான். இங்கேஇந்தியன்இல்லை, ஏனெனில் இந்தியன் என்றோர் இனம் இல்லை! தாமரைக்கண் அந்தத்தையலுக்கு என்று கவிவர்ணித்ததும், அக்கண்ணிலே, குளிர்ச்சிகாணச்சென்று, செருக்குக்கக்கும்கண்களை அந்தச்செல்விகொண்டிருக்கக் கண்டு, கோபித்துப்பயன் என்ன? அது போல, இந்தியன் என்ற பொருந்தாத பெயரைச் சூட்டிக்கொண்டு, இந்தியன் எங்கேஎன்று, எண்ணாயிரம் குலங்களைக் கொண்டிருக்கும் குப்பை மேட்டிலே, கூடிக்கூடித்தேடினாலும்காணமுடியாது, கூவிக்கூவி அழைத்தாலும், பதில்பெற முடியாது. எனவேதான், நிக்கோலாஸ் இந்தியனைக் காணவில்லைஎன்றார். இதற்காகக்கோபம்பிறந்துபயன் என்ன? நமக்குரிய பெயரைச் சூட்டிக்கொள்ள இதுவழிகாட்டுமே. நாம்முஸ்லிம் என்று கூறிக்கொள்ள ஒருபெருங்கூட்டத்துக்கு வாய்ப்பும், வசதியும் வழியும் வகையும் கிடைத்துவிட்டது. திராவிடருக்கும் அப்படியே! ஆனால் கொஞ்சம்மெள்ளமெள்ள ஏற்பட்டு வருகிறது. ஆரியருக்கு ஆதிநாள்தொட்டு இருக்கிறது! ஆகவே, அந்தந்த இனத்தை அதனதன் இடத்திலே இருக்கச் செய்தால், தேடிப்போகிறவனுக்கு, அங்கே இருப்பது தெளிவாகத் தெரியும்.கடல்நீரிலே கன்னல்சுவையைக் காணமுடியுமா? காட்டுக்கூச்சலிலே கலியாணி இராக ஆலாபனத்தைக்கேட்க முடியுமா? அதுபோலத்தான், எண்ணத் தொலையாத பிரிவுகளும், பிளவுகளும், கொண்டுள்ள இடத்திலே, ஏட்டிலே, நாட்டை அறியாதார், தீட்டிவைத்துள்ள, பொருளற்ற பதமான "இந்தியன்" என்பதை நம்பிச்சென்று, இந்தியனைக்காணலாம் என்று முயற்சித்தால், பலன்கிட்டாது. நிக்கோலாஸ், மற்றஇடங்களிலே உள்ளதுபோலவே இங்குமிருக்கும்என்று தான்முதலிலேஎண்ணினார். இந்தியனைத் தேடினார், கிடைக்கவில்லை.எனவேதான், இந்தியாவிலே இந்தியனைக்காணவில்லை, என்று தீர்ப்பளித்தார். இதிலே தவறு என்ன? உண்மையை அவர்உரைத்தது குற்றமா? உள்ளதைச்சொன்னதுகேட்டு அவரை "விட்டேனா பார்!" என்றமிரட்டுவது அறிவுக்குச்சான்றா, அன்றி ஆத்திரத்தின் விளைவா, என்பதை அனைவரும் ஆரஅமர யோசித்துப்பார்க்கவேண்டும்.

"18கோடிமக்கள்,பண்டைநாட்களிலிருந்து வாழ்ந்துவருகிறார்களே, அவர்கள் இந்தியர்களன்றோ" என்று தோன்றும். ஆனால், ஜாதியிலே தாழ்த்தப்பட்டுக்கிடக்கும், 6-கோடிக்குமேற்பட்ட, ஆதித்திராவிடர்களைக்கண்டால், அவர்களும், இந்தியர்தானோ! ஆயின், அவர்களின் நிலைஅங்ஙனம் இருத்தல் அறமாமோ! இந்தியரையே இந்தியர், தீண்டுவது, இழிவாகும் என்ற கருத்து எழலாமோ? எங்கேனும் ஒருநாட்டுமக்களிலே ஒருபிரிவினர் மற்றோர் பிரிவினரைத்தொடுவதும், கூடாது என்று கருதும்கொடுமை, சகிக்கக்கூடியதா? தீண்டப்படாதவர்! என்ன பெயர் அது! அவர்கள்தொட்டதண்ணீர் குடித்தால் தோஷமாம்! அவர்களிலே சிலரைக்காண்பதே குற்றமாம். தீண்டாமைமட்டுமல்ல, பாராமையுமன்றோ இருந்திடக்காண்கிறோம். இவ்விதம், ஒருகூட்டத்தினரை, பிரிட்டிஷ்சாம்ராஜ்யத்திலேயுள்ள வெள்ளைக்காரர் எவ்வளவுஎண்ணிக்கை இருப்பரோ அந்த அளவுஎறக்குறைய இருக்கும் ஆதித்திராவிடர்களை மிருகத்திலும் கேவலமாக நடத்திவருவதைக்காணும், எந்த மேனாட்டானுக்காவது, கொடுமைசெய்பவனையும், கொடுமைக்கு ஆளாகின்றவனையும், சேர்த்து இந்தியன்என்று ஒரேபெயரிட்டுஅழைக்க மனம்வருமா?

இந்துக்கள்கிடக்கட்டும்,முஸ்லீம்களைப் பார்ப்போம். அவர்கள் 10 கோடிமக்களாவர். அவர்கள் "நாங்கள்வேறு, இந்துக்கள்வேறு! நாங்கள், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைப்போலவே, முன்பு, ஒருசாம்ராஜ்யத்தை அமைத்து ஆண்டவர்கள். எங்கள் மார்க்கம் வேறு—மனப்பண்புகள்

(9-ம் பக்கம் பார்க்க)

# ★ ★ ★ "அந்தச் சண்முகம்!"

7—4—40ல் ஈரோட்டில் கூடியகோவை ஜில்லா மாநாட்டில், சர். செல்வத்தின் படத்தைத்திறந்து வைத்த சர்.சண்முகம், ஆரிய—திராவிட பிரச்சினைபற்றியும், தமிழ்நாடு தனி நாடாக வேண்டுமென்ற பிரச்சினைபற்றியும் கூறியுள்ள பகுதிகள் தரப்பட்டுள்ளன.

7-4-40ல், சர். சண்முகம், இந்தியா ஒரு நாடாகாது, பிரிவினைகோருவதுகேட்டுப்பயப் படவோ, ஆச்சரியப்படவோ தேவையில்லைஎன்று, கூறினார்.

ஐந்து ஆண்டுகளாகி விட்டன! இப்போது, பாகப்பிரிவினை கூடாதுஎன்று பேசுகிறார், பாகிஸ்தான்பிரச்னையைச் சாடுகிறார்! இடைக்காலத்திலே, இவர்இதுபற்றி ஒருகருத்தும்உரைத்ததில்லை.ஐந்தாண்டுகளுக்கு முன்பு, அவர் பிரிவினைக்குரிய காரணங்களைவிளக்கிப்பேசி யிருப்பதை,மீண்டும் கண்டாலாவது,தமதுதற்போதையப்போக்கு தவறுடையது என்று தெரிந்து கொள்வார் என்ற நம்பிக்கையுடன்,அவருடைய முன்னாள் மொழியை வெளியிடுகிறோம்.

அவருக்கு இது பயனளிக்கத்தவறினும், திராவிட,இஸ்லாமிய மக்களுக்கு "அந்தச் சண்முகத்தை!"க்காண ஒரு அரியவாய்ப்பாகவேனும் இராதா! இன்றுள்ள சண்முகம், இனஅரசு மறுக்கும், சர்! ஆனால்அன்றுஅவர், நமக்காக, இனத்துக்காக "வழக்குரைத்த" வீரச்சண்முகமாகவிளங்கினார்.

நமக்காக வாதாடிய செல்வம் மறைந்தார், நமக்காக வாதாடிய சண்முகம் மாறினார்! என்னே நமது நிலை!

"ஆரியர்—திராவிடர் என்ற மொழிகளைச் சர். செல்வம் உற்பத்தி செய்யவில்லை. தமிழ் நூல்களில், ஆரியர்-திராவிடர் என்ற மொழிகள் உள்ளன. ஆரியர்—திராவிடர் என்ற வித்தியாசம் 2000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இருந்து வருகிறது. சிலப்பதிகாரத்தில், இது காணப்படுகிறது, சிலப்பதிகாரம் 1800 ஆண்டுகளுக்கு முன்பு இயற்றப்பட்டது, என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். அந்த சிலப்பதிகாரத்தில்,தமிழ் மன்னர்களை, வடநாட்டு ஆரிய மன்னர்கள் இழிவாகப் பேசினர் என்பதற்காக, சேரன்செங்குட்டுவன் படை எடுத்துச் சென்று கனக விசயர் என்ற ஆரிய மன்னர்களை அடக்கியதாகக் கூறப்பட்டுள்ளது. இதிலிருந்து, தமிழ் மன்னர்களை ஆரியர்கள் இழிவுபடுத்தினர் என்பதும் இதனால்பேதமும்விரோதமும்இருந்துவந்தனஎன்பதும்விளங்குகிறது. எனவேஆரியர்—திராவிடர் என்ற வழக்கிலே புதுமை ஒன்றுமில்லை. ஆரியர்-திராவிடர் பிரச்சினைபற்றிப் பேசியதில் சர். பன்னீர்செல்வத்தின் மீது குற்றமொன்றுமில்லை.

தம் உடல் நலனையும் பாராது, சர். செல்வம் தமிழருக்கு உணர்ச்சி ஊட்டினார்.

"தமிழ்நாடு" என்பது புதிய கருத்தா? இல்லை. பூர்வீக காலத்திலேயே'தமிழகம்' உண்டு. அதற்கு எல்லையும் வகுத்து உள்ளனர். வடவேங்கடமும் தென்குமரியும் தமிழகத்தின் எல்லைகள் எனறு குறிக்கப்பட்டுள்ளன.

தொன்றுதொட்டு தமிழ்நாடு, இந்தியாவினின்றும் வேறுபட்ட ஒரு தனி நாடாகத்தான் இருந்து வந்திருக்கிறது. இது செல்வமோ பெரியாரோ கூறிடும் கட்டுக்கதையல்ல. இரண்டாயிரம் ஆண்டுகளாக இருந்துவரும் விஷயம். இதனை ஒளித்து வைத்து விடுவதனால், உணர்ச்சியை அடக்கி வைக்க முடியாது.

ஆனால், இந்த உணர்ச்சி வெளிவரக் காரணம் என்ன, என்பதைத்தான் புத்திமான்கள் யோசிக்கவேண்டும். நல்லதோ, கெட்டதோ, தமிழ்நாடுதமிழருக்கேஎன்று பெரியார், (Partition suit) பாகம் பிரிக்க வழக்குப்போட்டுவிட்டார். ஏன் பெரியார் இந்த வழக்குத்தொடுத்தார் என்பதைத்தான் அறிவாளிகள் ஆலோசிக்கவேண்டும்.

முஸ்லீம் நாடு தனியாகவேண்டுமென ஜின்னாவும், தமிழ்நாடு தனியாக வேண்டுமெனப்பெரியாரும்நாட்டைப்பிரிக்கவேண்டும்என்கின்றனர். இந்தியமாதாவைத் துண்டிப்பதா? குழந்தையை வெட்டுவதா? என்று சிலர் கேட்கின்றனர்.

ஆனால் ஜின்னா அவர்கள் முஸ்லிம் நாடுதனியாகப்பிரிக்கப்படவேண்டுமெனக்கேட்டபோதுநான் ஆச்சரியமோ, பயமோ, நடுக்கமோ கொள்ளவில்லை.

சிலர் இந்தியாஎன்ற ஒற்றுமைப்பட்ட ஒரு நாட்டைப்பிரிப்பதுதவறுதான்.அதிலும் இப்போது ஐரோப்பாவில் பலநாடுகள் ஒன்றுகூடி வேலை செய்யும் காலம். ஆனால் இந்தியா என்ற ஒன்றுபட்ட நாட்டைப்பிரிப்பது சரியா என்றுகேட்கிறார்களே, அந்தக்கேள்வியில்உள்ளவாசகம் சரியாஎன்று நான்கேட்கிறேன்.இந்தியாஒன்றுபட்டநாடா?எந்தக்காலத்திலாவது அரசியல் துறையில் இந்தியா ஒன்றுபட்ட நாடாக இருந்ததுண்டா?

சமஸ்கிருதபுராணங்களில் 56தேசத்து மன்னர்கள் இருந்தார்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. அசோகர் இந்தியாவை ஏகதேசமாக ஒன்றுபடுத்தி ஆண்டுவந்தார். ஆனால் அவரால் தண்டகாரண்யம் வரையில்தான் வரமுடிந்தது.அசோகரும் இதில் தோல்வி அடைந்தார். அசோக ராஜ்யத்தில்தமிழ்நாடுசேர்க்கப்படவில்லை. சேர,சோழ,பாண்டிய, சத்யபுத்திரர், என நாலு தனி ஆட்சிகள் இருந்தன என்றே அசோகர் கல்வெட்டுகள் கூறுகின்றன.

அக்பரும் இந்தியாவை ஒரு நாடாக்கி ஆளப்பார்த்தார். ஆனால் அக்பர் காலத்திலகூடத்தமிழ் நாட்டை ஆளமுடியவில்லை. அக்பருக்குப்பிறகுஎன்னவாயிற்று?அக்பர்ஆட்சியின்போது ஒன்றுபட்டிருந்த வடநாடுகள்கூடத் தனித்தனியே பிரிந்து போயின.

---

## பம்பாய்

4-3-45ல் தாராவிதிராவிடநாடு பகுத்தறிவு நிலயத்தின் சார்பாக தோழர் எஸ். டி. சவரிதாசன் தலைமையில் செல்வம் நினைவுநாள் கொண்டாடியபோது செல்வத்தின்சிறந்த குணங்களை பற்றியும் அவர் நாட்டிற்குச்செய்த அருஞ்சேவைகளைப்பாராட்டியும் பலதோழர்கள் பேசினர்.

29—4—45ல் சென்னையில்
சிவாஜி
கண்ட
இந்து ராஜ்யம்!
என்னும் நாடகம்
சென்மேரிஸ் ஹாலில் நடைபெறும்

திராவிட நாடு.
காஞ்சி 11—3—45 ஞாயிறு

# குருபூஜை

தேசியப் போராட்டங்களிலும், தொழிலாளர் கிளர்ச்சிகளிலும் ஈடுபட்டு, அஞ்சாநெஞ்சரென்றும், ஆற்றல்மிக்கோரென்றும்கீர்த்திபெற்ற, வீரர், திரு. வி. க, இன்று ஏதும் செய்யாது, உடல்நலம்கெட்டு, உளவளம்குன்றி அச்சுக்கூடமே வீடு, அங்கேஉண்டு பலவடுஎன்று, கண்மூடி மௌனியாகிச்சிந்தையை அடக்கியே சும்மா இருப்பதரிது என்பதுபற்றிய சிந்தனையுடன் இருக்கிறார் என்றெண்ணிவிடவேண்டாம், அவருக்கும் அலுவல் இருக்கிறது! குருகுலப்போராட்டக் களத்தின்போது, முற்றம் செல்லமறுத்து வெளியேறினார், சிறைக்கோட்டம் செல்லக்காலம்வந்தபோது, உளம் இடந்தந்தும் உடல் இடமளிக்கவில்லையே, உமைஒருபாகா! என்று கூவினர், என்றபோதிலும், இப்போதும், ஏதோ அவராலானவேலையை அவ்வப்போது செய்துகொண்டுதான் வருகிறார். அலுவலாகமக்குத் திருப்தியே. ஆம்! வயதாகி, நடமாடும் வலிவுகுன்றி, நடைத்திண்ணையிலே, படுத்து, உறங்காதுகண்மூடி, மூடாவாயும், கேளாக்காதும், தலையில்லாஉடலும் கொண்ட தாத்தாவுங்கூடத்தடிகொண்டு தட்டி, வீட்டிற்குள் திருடர் நுழையாதபடி, தான் சர்வஜாக்ரதையாகக் காவல் புரிவதாகத்தான்எண்ணுகிறார்! எண்ணம், அவருக்குஅதுபோலிருப்பது தெரிந்த, வீட்டுவாலிபன், அவருடைய இயலாமைக்கு இரங்கி, அவர் கூறுவதைக்கேட்பதால்எழும் சிரிப்பையும் அடக்கிக்கொள்வான். அதுபோல, வீரக்கோட்டங்களைவிட்டு விலகி, ஓய்வாக ஒழிவிலொடுக்கம் கொண்டுள்ள திரு.வி.க. பழையநாள்போல்இருக்கமுடியாதுபோய்விட்டதே, பாழ்பட்டதே நாம் கற்றதும் கேட்டதும், கண்டதும்கொண்டதும்என்ற ஏக்கம்மேலிட ஒட்டாதபடி தடுத்துக்கொள்ள ஓரோர் சமயத்திலே, சிலபல செயலிலே இறங்கிக்காலந் தள்ளுகிறார். பார்க்கப்பரிதாபமூட்டும்காட்சி! ஆயினும்என்செய்வது? கனிகுலுங்கா மரம், நீர்இல்லாஆறு, பட்டுப்போன பயிர், கெட்டுப்போன குடும்பம், அணைந்த விளக்கு, சிதைந்தசித்திரம், நரம்பறுந்தயாழ், தொண்டைகம்மியவித்வான், பொருளில்லாப்பாட்டு, இவைகள், பரிதாபமூட்டுவன! வீராதிவீரர்கள், வெந்ததைத்தின்று, மனதில் வந்ததைப்பேசிக்கொண்டு இருக்கும் நிலைமையும் அதுபோன்றதே. ஜெர்மனியை ஆண்டு, ஐரோப்பாக் கண்டத்தை ஆட்டிப்படைத்து, ஆங்கிலநாட்டைத் தவிடுபொடியாக்கிட எண்ணியதே தோதிட்டமிட்டுக்களத்திலே கடுங்காற்றெனச்சுழன்றுவந்த கெய்சர் தோற்று, துயருற்று, நாடுகடத்தப்பட்டு, வேறுநாடு புகுந்து, வீடொன்றுஅமைத்து, அங்கே ஓர்தோட்டம்வகுத்துக்கொண்டு, அதற்கோர் வேலிபோட்டு, வேலியிட்டதோட்டத்திலே, காய்கறி பயிரிட்டுக்கொண்டு காலங்கழித்தார், கடைசிநாட்களிலே. ஆஸ்ட்ரியாவின் அரசியலையும், இத்தாலியின் எதிர்காலத்தையும், போலந்தின்போக்கையும், பெல்ஜியத்தின் பரிபாலனத்தையும், போலந்தின் பொறுப்பையும், ரஷியாவின் போக்கையும், மாற்றிட, எந்தக் கெய்சரின், சிந்தனைசெலவிடப்பட்டு வந்ததோ, எந்தக்கெய்சரின் கண்கள் இதுபோன்ற அரசகாரியங்களைக் கண்காணித்துவந்தனவோ, மன்னர்பலரின் முடியைப்பிடிசாம்பலாக்க உபயோகமாகிவந்த கரங்கள், கடைசிநாட்களில், தோட்டத்துப்பயிரிலே சிந்தனையும், கிழங்கு தோண்டிஎடுக்கக் கரமும், அதனைக்காணக்கண்களும், பயன்படும் "காலம்" வந்தபோது, அது, எவ்வளவு பரிதாபத்துக்குரிய காட்சியாகிறது. அதுபோலத்தான், குருகுலப் போராட்டமென்ன, குண்டாந்தடியடிநடத்திய ஏகாதிபத்தியத்தோடு வாதாட்டமென்ன, தொழிலாளர் முதலாளிக் கடும்போர்களென்ன, எனும் இன்ன பிறவற்றிலே ஈடுபட்டு, வீரவாள்தொட்டு, வாழ்ந்துவந்த திரு. வி. க. இன்று ஏதும் செய்யாதிருந்தால்ஏக்கத்துக்குஇடந்தரும் என்ற எண்ணத்தால் தூண்டப்பட்டு, செய்துவரும் செயல்தான், யாது, எனில், கூறுவோம் கேண்மின், கேட்குமுன் சிரிப்பை அடக்கக்கற்றுக்கொள்மின், அவருடைய இன்றைய அலுவல், குருபூஜைகளில் கலந்துகொண்டுசொற்பொழிவாற்றுவது! அந்தோ! அஞ்சாநெஞ்சரே! தேசியவீரரே! தேன்தமிழ்ப்புலவர் ஏறே! உமக்கேற்ற வேலை இதுதானா? வேலைக்கேற்ற ஆள், ஆளுக்கேற்ற வேலை என்பார்களே, நீர் அறியீரா!—என்றுபலரும் கேட்கத்துடிப்பர். என்செய்வது? பொதுமக்களின் உரிமைப்போருக்காக உழைக்கவேண்டியவர், இதுபோது, குருபூஜைகளுக்குக்கூடிடும் "மெய்யன்பர்களுக்கு" பட்டிசைத்த அல்குலாள் என்று பாடியநாயனாரின் திருவாக்கின் மறைபொருள் விளக்கமாற்றவும், தாண்டவமூர்த்தியின்உருவிலேஏகாதிபத்தியஒழிப்புச்சித்திரத்தைக் காணும் வழியாது என்று தெரிவிக்கவும், பயன்படுகிறார்! மன்னன் கரத்திலேஇருந்தசெங்கோல்மாகாணக்கண்காட்சிசாலைப் பொருளானதுபோல! கால்கெட்டகுதிரை, பந்தயப்புரவிப் பதவியிலிருந்துநீங்கி, "பத்தணா!எட்டணா" என்று பேரம் பேசும், ஜட்காக்காரனிடம்சிக்கியது போல! உதிர்ந்தசருகு, கூட்டித்தள்ளிவிடப்படுவதுபோல! வழுக்கிவிழுந்தவனிதை, கிழக்கும் மேற்கும் நோக்கிக் கீழ்க்கண்ணால் தாக்கி, தாக்குண்டவர்தரும் பணத்தால் அங்கத்தை வளர்க்கும் பங்கம்பெறுவதுபோல! குருபூஜை! குங்கிலியக்கலயநாயனார் பற்றிச்சொற்பொழிவு. மடம்! அங்குதிலகவதியாரின் (உள்ள, உடல் அல்ல)திடம்பற்றியசொற்பொழிவு! ஐயகோ! இதற்கா, இத்துணை அறிவுடைத்த அண்ணல் பயன்படவேண்டும்.

இந்தஎண்ணம், அவரைஅறிந்தாருக்குமட்டுமல்ல, அவருக்கேகூட வரத்தானே செய்யும். முன்னாளின் முடுக்கும், இன்னாளின் இடும்பையும், ஒன்றைஒன்றுசமருக்கிழுக்க, இப்போரிலே சிக்கிடும் பாழும் மனத்தைத்தாங்கிக்கொண்டு பரமன்மீது பாரத்தைப்போட்டுவிட்டு, வாழ்வாவது மாயம், மண்ணாவது திண்ணம் என்ற தத்துவத்தைத் தடியாகக் கொண்டு, தள்ளாடி நடந்து, தமிழைத்தந்து, அதுதரும் "தீ"யினால் ஜொலிக்கும் மக்கள் முகத்தைக் கண்டு, வேற்றுமனிதரோ எனவிரண்டு, இவ்வீதிவேண்டேன், இனி வேறோர்தெருச்செல்வேன், என்று

வருகிறார், பாகுமொழியார். குருபூஜைக்கு வரும் குணாளரை, இடையிடையே, இங்கோரிடம் அங்கோரிடமாகத், தொழிலாளர் கூட, அழைப்பர். அங்குபொதுஉடைமையின் பொலிவு நோடுடைய செவியரின் சிரத்திலே காணலாம்என்றும், மாவீரர் லெனின் கொள்கையை, மாசில்மதியமும் மாலையும் பூண்ட மகேசனிடம் பார்க்கலாமென்றும் பேசிவிட்டும் வருவார்.

இந்நிலையில் உள்ளவரை தூத்துக்குடியிலே சென்ற திங்கள் இறுதிக்கிழமையிலே, (25ம்நாள்,) கைவல்யசாமி மடத்துக் குருபூஜையில் கண்டசிலர்,—அவர்கள் சு. ம. க்களாம்! கேள்விதந்தனராம்! குழப்பம் விளைவிக்கவும் முயற்சித்தனராம்!! சுதேச மித்திரனின் வாசகம், நாம் எழுதியது. குழப்பம் விளைவிக்க முயற்சிப்பதா? தகுமா? முறையா? தகுதியும் முறையும் கிடக்கட்டும்! தேவையுள்ள செயலா அது? குழப்பத்தை விளைவிக்க யார் தானாகட்டும் அங்கே முயற்சிப்பானேன்? கேள்வி கொடுத்தனர்! போதாதோ? குழப்பம் செய்யவா முயற்சிக்க வேண்டும்? தேவையில்லையே! வீண்சிரமமன்றோ அது! கேள்வி கொடுத்ததே போதும், சொற்பொழிவாளரை அத்தான் குழப்பிவிட்டிருக்கும், சபாநாயகரின் சித்தம், குருபூஜைக்காரரின்மனமாவும், குழம்பிவிட்டிருக்கும்! கேள்வித்தாள் கண்டதும், அங்கே சர்வம் குழப்பமயமாகித்தீரும்! இந்நிலையிலே, குழப்பம் நடக்கவேறோர்முயற்சிதேவையேஇல்லை, காரணமின்றிக் காரியமாற்றான் சு. ம. ஆகவே, குழப்பம், சு. ம. விளைவித்திருக்கவேமாட்டான். அவனுடையதொழில் அதுவல்ல! குழப்பம் அங்கு ஏற்பட்டிருக்கும், அது எதிர்பாராததல்ல! குழப்பத்தைச் சு. ம. செய்திருக்கமாட்டான். ஏனெனில் அவசியமற்ற அலுவலிலே அவன் ஈடுபடுவதில்லை. குழப்பம், ஒருவர் மூட்டிவிட்டு வந்ததுமல்ல. அது, இயற்கையின் கூறு! பதிலுரைக்கவகையிலாரிடம் கேள்வித்தாள் தரப்பட்டால், அவர் மனம் குழம்பும், அவர் மனம்குழம்பியது கண்டதும், கூடியிருந்த கும்பலின் மனமும் குழம்பியிருக்கும். எனவே, குழப்பம் ஏற்பட்டிருக்கும், ஆனால் அதற்காகச் சு. ம. மீது குற்றஞ்சாட்டுவது, குறைமதியாளர்களின் குறும்பு!

நிற்க, குழம்பிய திரு. வி. க. என்ன பேசினார்? பேசினாரா? இல்லை! ஏசினார்! என்னென்று? ஓ! நீங்கள் என்னைஎன்னவென்று எண்ணிக்கொண்டீர்கள். அசகாயசூரனுக்சே! அச்சமற்ற வீரனல்லவோ! மச்சுமாடி ஏறியும் குதித்திடுவேன்! மடுவிலே புகுந்து மறைந்திடுவேன்! நான் யாருக்குமஞ்சாதவன்!—என்ற முறையிலே, வாசகங்களை வீசியிருக்கிறார்.

சத்தம் செய்வதைக்கண்டு நான் அஞ்சப்போவதில்லை. இது திரு. வி. க.வின் மணிமொழி! சரி! மெத்தச்சந்தோஷம்! சத்தம்கேட்டுச் சித்தம் சோராததற்காக உமக்கோர் சித்திரப்பரிசு, செந்தமிழ்நாட்டார் தரவேண்டுமென்கிறீரா? இதை ஒரு பிரமாதமாகப் பேசிக்கொள்கிறீரே, என்றுயாருக்கும்அவரைக்கேட்கத்தோன்றும்—நமக்கு மட்டும், வயோதிகரின் கோபம், நகைச்சுவைக்கான நிகழ்ச்சியாகவே தோன்றுவது வழக்கம்.

“வயதானவனென்று நினைத்துக் கொள்ளவேண்டாம். அளவுகடந்த பலம் இப்பொழுது என்னிடம் இருக்கிறது. ஆயிரக்கணக்கில் தொழிலாளர்களடங்கிய கூட்டத்தில் பேசிக்கொண்டிருக்கும் போது சர்க்கார் சுட ஆரம்பித்தனர், சிலர் மாண்டனர், பலர் காயமடைந்தனர்” என்று வீராவேசமாகப் பேசினாராம். தம்முடைய பிரதாபங்களை இவர் தம்பட்டமடித்துக் கூறினாலன்றிப்பிறருக்குத்தெரியாத அளவுக்குப், பொதுஜனத் தொடர் பற்றுப்போய்விட்டார் என்பதற்கு இதைவிட வேறென்ன எடுத்துக்காட்டு, தேவை என்று கேட்கிறோம். கேட்டகேள்விக்குப்பதில் கூறச்சொன்னால் “பாட்டன்காலக்” கதையை அளப்பது, புல்லமையின் அறிகுறியா, பயத்தின் மேலீடா என்பதைப் பகுத்தறிவாளர் சிந்தித்துப்பார்க்க வேண்டுகிறோம்.

நாமும் அறிவோம், அந்தத்தொழிலாளர் கிளர்ச்சிக்காலத்தை. திரு. வி. க. கூறினதுபோலத் தொழிலாளர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதும்தெரியும் அந்தக்காலத்துத் “தலைவர்களாக” யாரார் இருந்தனர் என்பதையும் நாம் அறிவோம். வெள்ளையுடை வேந்தர் சர். தியாகராயரின்மாளிகையை வலம்வந்து, சர்க்காரின் பாணம் தமது உடலைத்தைத்திடாதிருக்கக் கருணைக்கேடயம் தருமாறு, வாங்கோரிய, வீராதிவீரர்களை நாம் அறிவோம். சாது அச்சக்கூடத்தாரின் வீரவுரையும் நமக்குத்தெரியும், நாட்டிலே வீரக்கனல்மூண்டெழுந்து, கஷ்டநஷ்டத்தைக் கருதாது கலங்காது, தீயிலேகுதித்திடத் தீரர்கள் திக்கெட்டும் கிளம்பிய போதெல்லாம், திரு. வி. க. மட்டும், அந்தக்கூட்டத்தை விட்டுவிலகி, இனிது இனிது ஏகாந்தம் இனிது என்று கூறிச்சென்றதையும்அறிவோம். பதிலுரைக்க முடியாவிட்டால், மௌனம் சிறந்தது. அதைவிட்டார் அன்பர், அளந்துகொட்டினார் அவரிடமிருந்த பதரை! இதுஏன்? ஆவேசப்பேச்சினாலே மட்டுமே இனி, அறிவுக் கணைகளைத் தடுத்துவிடமுடியுமென்று நம்பினால், நண்பர் நிச்சயமாக ஏமாற நேரிடும். இதுநரிபரியான நாளல்ல! நமச்சிவாயத்தின் துணைகொண்டு, கல்லை ஓடமாகக்கொண்டகாலமல்ல! இப்போதுள்ளகாலம், ஏன்? என்ற கேள்விக்காலம். இக்கால வாலிப உலகமே ஒரு கேள்விக்குறி. குதர்க்கம் பேசியோ, ஆத்திரமொழி உரைத்தோ, வாட்டினால், கேள்விக்குறியாக உள்ள வாலிப உலகு, அபாயக்குறியாகக்காட்சிதரும். காலமறிந்து கரும மாற்றும்படி நாம் கனிவுடன் அவருக்குக் கூறுகிறோம். பெரியாரின் பெருநண்பர் என்ற ஒரே கவசம், எப்போதுமே உதவி செய்துவிடாது. வீரப்பேச்சும், வெல்லத் தமிழும் என்றென்றும், வெற்றிக்குவழிதரா. ஆம்! அன்பர், நிச்சயமாக இனி, நாட்டு மக்களின் நோக்கும் போக்கு மறிந்து நடப்பது நலன் பயக்கும்.

கேள்விக்குப் பதிலுரைக்காது ஏதேதோ கூறினார் திரு. வி. க. ஆனால் அந்தக் கேள்விகளைக்கேட்டது பயன் தராது போயிற்றோ எனில், இல்லை. புராணப் பிரசங்கியாரைப் புதுமைக்கருத்துரைக்க வைத்துவிட்டது. துப்பாக்கிமுனையைக் கண்டு பயப்படாத தீரர், தான்கண்டு திகிலுற்றதுமட்டுமல்லவிந்தை, சு. ம. க்களைச்சுடுசொல் கூறினர், மறுதினமே, சு. ம. வானார்! எப்படிஎன்பீர்! மறுநாள், 26ந்தேதிவேறோர் இடத்திலே விரிவுரை நிகழ்த்தினார். அதிலே காணக்கிடைக்கும் மொழிகள் இதோ, காண்க.

“ஆண்டவனுக்குஉருவம்சொல்லப்படவில்லை. தம்தம் மதங்களே பெரிதென்று கூறிக்கொண்டிருக்க முடியாது. சமயச் சண்டைகளை கைக்கொள்வது அறியாமை. மனிதனிடமிருக்கும்குரங்குக்குணம் நீங்கவேண்டும்மதவெறிதொலையவேண்டும்.தமிழர்கள்தொல்காப்பியத்தைப் படிக்கின்றனர். அதில் ஜாதிப்பாகுபாடுகள் இருக்கின்றனவா? இப்போதுஇருந்துவரும் மடங்களில் ஜாதிப்பாகுபாடுகள் இருந்து வருகிறது. இதைச்சமீபத்தில்பார்த்தோம்.சமீபத்தில்ஓர்மடத்திலிருந்துஆரம்பிக்கப்பட்டிருக்கும்கல்லூரிக்கு இன்ன ஜாதிக்காரர்களைத்தான்சேர்த்துக்கொள்ளப்படுமென்று சொல்லியிருக்கின்றனர். இந்த மடங்களை ஓர் முதலாளிக்கூட்டமென்றுதான் சொல்லவேண்டும்.”

எந்தக்கூட்டத்தினரை, சு. ம. என்று, கேலிமொழி பேசினாரோ, அதே சு. ம. கருத்துதான், அன்பர்கூறியது. அவரறியாது அவரிடம் சு. ம. கொள்கைகளைப் புகுத்தினர் சு. ம, க்கள். அன்பர் அறிந்த ஆளுக்குத்தக்கதாட்கொள்ளும் தன்மை உண்டாம்! சு. ம க்காரர்களுக்குத், தவறி நடப்போரை நிறுத்திநெறிநடக்க வைக்கும் திறமை இருக்கிறது என்பது இதனால் நன்குவிளங்குகிறதன்றோ!

முதல்நாள் மாலையிலே கேள்வித்தாள். மறுமாலை, அன்பர், பெரியார் இராமசாமியின் பெருநெறிபிடித்தொழுகவேண்டும், பொய்மை பேசாதிருக்கவேண்டும், மதமானபேய் பிடியாதிருக்க வேண்டும், என்பதைப்பேசிவிட்டார். அவ்வளவுதான் நமக்குத்தேவை. அன்பர் வீராவேசம் பேசுவதைவிட, இதுபோன்ற விவேக வாசகம்பேசுவது நன்மைதரும், நாட்டுக்கும், நட்புக்கும்.

(8-ம்பக்கம் பார்க்க)

## குருபூஜை

7-ம் பக்கத் தொடர்ச்சி

குருபூஜைகளுக்குச்செல்லும், குறுகிய மண்டலத்துக்குக் கொற்றவனாகி, அதனால் களிப்புற்று, அக்களிப்புச்சதுக்ஷனென்றாரம்பி, முதல்நாள் மாலை ஆத்திரத்தைக்கக்கிய அன்பர், மறுமாலை, மனமாறுதலைத்தெரிவிக்கும் முறையில், உண்மையான குருபூஜை செய்யுமுறையில் சு. ம. கோட்பாடுகளை ஆதரித்து விட்டார். முதல் மாலையிலே அவர் மூட்டிய கோபத்தை மறுமாலை ஆற்றிவிட்டார். ஆனால், நாம், முழுத்திருப்திபெற மறுக்கிறோம். ஏன்? போலீசார் சுடச்சுட, அஞ்சாதுநின்றேன் இன்று எனக்கு அளவிடமுடியாத பலம் இருக்கிறது, நான் வயோதிகன் என்று எண்ணாதீர்! நான் அஞ்சேன்!—என்று முழக்கம் செய்தாராமே, அவ்வளவு வீரம் செறிந்தவராக இருப்பது உண்மையானால், ஏன் அவர் தீவிரப்போராட்டங்களில் ஈடுபடாது திருநீற்றுப்பையும் தேவார பாராயணமும் போதுமென்று கூறும், மடங்கள் சென்று, குருபூஜை செய்து காலந்தள்ளுகிறார். வீரர்களுக்கு, இங்குவேலை இருக்கிறது! மேலும் மேலும் வேலை. வீரருக்குரியவேலை! நாட்டை மீட்கும்வேலை! மக்களின் மனமாசு நீக்கும்வேலை! பழமையின் நெளிவுகளைப் போக்கும் வேலை! பார்ப்பனியத்தைச்சாடும்வேலை! உரிமைப்போர், வேலை! உரக்கக்கூவும் வேலையல்ல! உருத்திராக்கமாலையின் உயர்வுகூறும் வேலைஅல்ல! உரிமை! உரிமை!—இந்தவேலையிலே, இவ்வளவு பெரியவீரர், துப்பாக்கிமுனையருகே நின்றிருந்த வீரர், இல்லையே, ஏன்? ஏன்? எவரிடமிருந்து பதில்பெற முடியும்! ஏன், காணோம் வீரரை? வீரரே! ஏன் காணப்படவில்லை! இது தமிழகத்தின் கேள்வி. இதற்கேற்பதில் என்ன? நம் மனக்கண் முன் தோன்றுகிறார், குனிந்ததலையும், மெலிந்த உடலும், பயந்தபேச்சும் காட்டிடும், பழமையின் பிடியில் சிக்கியதால் புதுமைக்குத்தாவமுடியாது தத்தளிக்கும், பண்டிதர் திரு. வி. க. அவர், 'தேனில் வீழ்ந்த ஈயானார்! என்செய்வார்! பரிதாபம்!

---

## சிதம்பரம்

அண்ணாமலைநகர் புகைவண்டி மேடையில் 1—3—45 முதல்தவறாது திராவிட நாடு கிடைக்கிறது

இதுவரை ஆதரித்தவர்கள் 1944ன்பாக்கியை நேர்செய்யவேண்டுவதுடன், முன்பணம் கட்டாதாரும் தட்டின்றி ரொக்கத்திற்கு வாங்கிக் கொள்ளுமாறு ஏற்பாடு இருப்பதறியவும்.

புலவழகன்

"திராவிடநாடு"

ஏஜண்டு

## ஜெர்மனிமீது விமானத்தாக்குதல்

ஜெர்மனியின் தொழிற்சாலைகளிலோ, போரரங்கங்களிலோ, எண்ணெய்வயல்களிலோ, ரயில்வேக்களிலோ எதிரியின் எதிர்ப்புச் சிறிதும் இல்லாமல் அழிக்கும் வேலையில், பிரிட்டிஷ், அமெரிக்கா விமானப்படைகள் ஏவப்பட்டிருக்கின்றன. இதற்கான திட்டம், முப்பெரும் தலைவர்களும்அவர்களுடையஇராணுவத் தலைவர்களும் சந்தித்தபோது நிறுவப்பட்டது.

ஏராளமான வெடிவிமானங்கள் பகலிலும் இரவிலும் ஜெர்மெனிமீது பறந்து சென்று ஆயிரக்கணக்கான வெடிகுண்டுகளை வீசிவருகின்றன. மேற்குமுனையிலே பிரிட்டிஷ், அமெரிக்கா விமானங்கள் மூவாயிரம் நாலாயிரம்தடவைகள் பறந்து சென்று தாக்கிவருகின்றன.

ஒவ்வொரு விமானத்தாக்குதலும் ஒரு பெரியபோருக்குச்சமமாகும். ஏனெனில் ஒவ்வொருதாக்குதலிலும் ஆயிரக்கணக்கான விமான சிப்பந்திகள் கலந்துகொள்கிறார்கள். உதாரணமாக ஆர். ஏ. எப். ஆயிர வெடிவிமானத்தாக்குதல் ஒன்றின்போது 7,000 விமான வீரர்கள் ஜெர்மனிமீது பறந்துசென்றார்கள். இதற்கு மறுநாள் காலையில் மேற்குப் போர்முனையிலிருந்து 1,400 வெடிவிமானங்களும், 800 வேட்டை விமானங்களும் கொண்டு நடத்தப்பட்ட தாக்குதலில் 19,00 நேச விமான வீரர்கள் பங்கெடுத்துக்கொண்டார்கள், இவ்விதமாக 24 மணிநேரத்திற்குள் மொத்தம் 26,100க்கு அதிகமான விமானிகளும் விமான சிப்பந்திகளும் ஜெர்மன் விமானப்போரில் ஈடுபட்டிருக்கிறார்கள். மொத்தம் 20 லட்சம் காலன் பெட்ரோல் செலவாயிற்று

## சர்ச்சில் பறக்கிறார்

கிரிமியா மாநாட்டைப்பற்றிகாமன்ஸ் சபையில் நடந்த விவாதத்தின்போது, கிரானபோர்ன் பிரபு செய்த முதல் பிரசங்கத்தில் பிரதம மந்திரி இதுவரை விமானமூலம் செய்துள்ள பிரயாணங்களின் ஜாபிதா ஒன்றையும்கொடுத்தார். அவர் குறிப்பிட்ட பிரயாணங்களுடன் மைல்கணக்கில் அவைகளின் தூரத்தையும் சேர்த்துக்கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது.

1. பிரான்ஸ்; (1940) 450 மைல்;
2. அமெரிக்கா: 6,500 மைல்;
3. கானடா: 6,000 மைல்;
4. கஸாபிளாங்கா: 4000 மைல்;
5. மாஸ்கோ: 9000 மைல்;
6. டெஹ்ரான்: 10,000 மைல்:
7. பாரிஸ்: 450 மைல்;
8. ஏதென்ஸ்: 4,000 மைல்;

மொத்தம் பிரயாணம் செய்ததூரம் 40 000 மைலுக்கு அதிகமாகும்.

* * * *

இவ்வார முடிவில் முதன் மந்திரிமிஸ்டர் வின்ஸ்டன், சர்ச்சில், ஜெனரல் ஐஸனோவரையும் பீல்டு மார்ஷல் மாண்ட்கோமரியையும் அவரவர் தலைமை நிலையத்தில் பார்வையிட்டார்.

கொலோன் நகரம் நேசப்படைகள் வசமாயிற்று என்று அதிகார பூர்வமாக அறிவிக்கப்படுகிறது,

* * * *

இந்த கொலோன் நகரம் ஜெர்மனியிலுள்ள பெரிய நகரங்களில் நான்காவதாகும், இதில் முன்னர் 8,00,000 பேர் வசித்தனர். இப்போது 1,00,000பேருக்குக் குறைந்தவர்களே இங்கு தங்கிவருகின்றனர்.

ஜெர்மனியின் பிரதான மாகாணம் பூராவிலுமுள்ளமிகமுக்கியமான போக்குவரத்து கேந்திர நகர்களில் கொலோனும் ஒன்று. ரைன் நதி பள்ளத்தாக்குக்கும், பெர்லினிலிருந்து பாரிஸ்போகும் பாதைக்கும் இடையில் அழகான இடத்தில்அது அமைந்துள்ளது.

* * * *

கொலோனிலும், அதன் சுற்றுப்புறத்திலும் மோட்டார் சாரங்கத் தளவாடயந்திர சாதனங்கள், யந்திரக் கருவிகள், ரஸாயன உற்பத்திகள், ரப்பர், மின்சாரக்கருவிகள், ரயில் வே வாகனங்கள், விமான யந்திரங்கள், உணவுப் பொருள்கள், ஆடம்பரப் பொருள்கள், வாசனைத் திரவியங்கள், மரச்சாமான்கள், ஜப்மனைனுக்கு வேண்டிய சாமான்கள் முதலியன ஏராளமாகப்பல்வேறு தொழிற்சாலைகளில் தயாராகின்றன. பிரான்வெல்ஸ் என்ற இடத்தில் எண்ணெய் சுத்தம் செய்யும் தொழிற்சாலை இரண்டு இருக்கின்றன. விமானத்திற்குவேண்டிய பாகங்கள் தயாராகும் தொழிற்சாலைகளும், ரயில்வே தொழிற்சாலைகளும் ரிப்பேள் என்ற இடத்தில் இருக்கின்றன.

19-வது டிவிஷன் துருப்புகள் வடபுறத்திலிருந்து மாந்தலேயை நோக்கி விரைந்து முன்னேறிக் கொண்டிருக்கையில் தங்களுக்கு எதிர்ப்படும் ஜப்பானியத்துருப்புகளைத் தாக்கியழித்துநாசம் செய்துவிடுகின்றன. ஜப்பானியர்இந்தப் பகுதியில் நிலைகுலைந்து அலங்கோலமாகப் பின்வாங்கி ஓடிக்கொண்டிருக்கின்றனர்,

---

## மணமக்கள் நன்றி

21—2—45 புதனன்று சென்னையில், நடைபெற்ற எங்கள் வாழ்க்கை ஒப்பந்தத்தைப் பாராட்டியும், வாழ்த்தியும், வந்திருந்து சிறப்பித்தும், வாழ்த்துரை கூறியும், வாழ்த்துப்பா வழங்கியும், பெருமைபடுத்தி மகிழச்செய்த பெரியோர்களுக்கும், தோழர்களுக்கும், கழகத்தாருக்கும், திராவிட நாட்டினர் யாவருக்கும், அன்பு கலந்த நன்றியறிதலான வணக்கத்தை, தனித்தனியே நேரில் தெரிவிக்க இயலாதது காரணமாக, இத்திராவிடநாடுஇதழ் மூலம் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இங்ஙனம்,

வெற்றிச்செல்வி

அன்பழகன்

## நிகோலாஸ் தீர்ப்பு!

4-ம் பக்கத் தொடர்ச்சி

வேறு—சமூக அமைப்பு முறைவேறு—எங்கள் ராஜ்யம் எமக்குத் தேவை—அதிலே நாங்கள் வாழவிரும்புகிறோம். பாகிஸ்தான்! பாகிஸ்தான்!' என்று முழக்கம் செய்கின்றனர். ஆகவே முஸ்லீம்களை இந்தியர்என்று ஒப்புக்கொண்டால், இந்துக்கள் இந்தியராக முடியாது, அதுபோலவே இந்துக்களை இந்தியர் என்று ஏற்றுக்கொண்டால், முஸ்லீம்கள் இந்தியர்என்று கூறுவது பொருந்தாது. இந்த இருபெரும் கூட்டத்தினரும், தாங்கள் வேறு வேறு என்பதை உணருகிறார்கள், ஒன்றாக உண்ண ஒருப்படுவதில்லை என்பதுமட்டுமல்ல, ஒரே ஆட்சியிலே இருக்கவோ, ஒரே இடத்தைத்தங்கள் இருவருக்கும் நாடாகக்கொள்ளவோகூட ஒப்பவில்லை. எனவே, இந்த இருவரும், இந்தியர்என்றழைக்கப்படுவது கூடாதகாரியமாகிறது.

பெரிய தொகுப்புகள்தான் இவ்வளவு தொல்லை தருவனவாக உள்ளன. இந்தியாவிலே, மிகக்குறைவான தொகையினராக உள்ள பார்சிகள் நிலைமையைப் பார்ப்போமென்றால், அங்கும்வேடிக்கைதான்! பார்சிகள், 90 ஆயிரம்பேர் இருப்பர் இந்தியாவிலே, ஆனால் அவர்கள் பொருளாதாரத்துறையிலே கொண்டுள்ள ஆதிக்கமோ, கோடி கோடியாக உள்ள கூட்டத்தவரின் வாழ்க்கையைத் தங்கள் கரத்திலே கொண்டு செலுத்தும் விதமாக இருக்கிறது. இந்தியாவிலே எங்கெங்கு இயற்கைச்செல்வம் அமோகமாகக் காணப்படுகிறதோ அங்கு காணலாம் அந்தச்சிறு கூட்டத்தை. தொழில் மூலம் செல்வத்தை வளர்க்கும் வேலையிலே அபாரமான சுறு சுறுப்புடன் அவர்கள் உள்ளனர். பிரிட்டிஷ் சாம்ராஜயத்திலேயே மிகப்பெரிய எஃகுத்தொழிற்சாலை, டாடா கம்பெனி, அதுஒரு பார்சிகம்பெனி. செல்வவான்களாகவும், கலாரசிகர்களாகவும், போகபோக்கியத்தை அனுபவிக்கும் சுகிகளாகவும், அதேபோது, சமுதாய சேவைகளான, பள்ளிக்கூடம் நிறுவுதல், மருத்துவமனை அமைத்தல் ஆகிய காரியங்களில் ஈடுபட்டுக்கொண்டும், இச்சிறுகூட்டம் சீரும் சிறப்புடனும்ஜொலிக்கிறது. செல்வம் ஈட்டும் வேலையில் மட்டுமல்ல, பத்திரிகை உலகிலேயும் பலபார்சிகள் பார்த்திபர்களாக உள்ளனர். இந்தப் பார்சிகள், இந்தியரா? அவர்களிலே பெரும்பாலோர், அவ்விதம் கூறிக்கொள்வதில்லை. தாங்கள் ஓர் தனி இனம் என்று கூறிக்கொள்கின்றனர். அவர்களின் நினைப்புமட்டுமா! இந்தியாவிலே உள்ள "பெருங்கூட்டத்தினர்" இந்தப்பார்சிகளை, இந்தியர் என்று ஏற்றுக்கொள்வதில்லை, அவர்கள் பர்சியர்கள், வெளிநாட்டார், இங்குவந்து எங்கள் செல்வத்தைச் சுரண்டிவிடுகிறார்கள். சுயராஜ்யம் வரட்டும், இவர்களை ஒருகை பார்க்கிறோம் என்று பேசுகின்றனர். இந்தப் பார்சிகளின் மதமே, தனி! ஜொராஸ்டர் என்பவர் இவர்கட்குவழிகாட்டி, (கிருஷ்ணனோ, கிருஸ்துவோ, நபிகள்நாயகமோ அல்ல) கலாச்சாரமும் தனி! பிணத்தை இவர்கள் அடக்கம் செய்கிற முறைகூடத் தனிதான்! பிணங்களைப்புதைப்பதுமில்லை, பொசுக்குவதுமில்லை, கழுகுகளுக்கு இரையாகும்படி வீசிவிடுகின்றனர், குறிப்பிட்ட ஓரிடத்தில். ஆகவே, பார்சிகள், இந்தியர் என்று கூறுவதற்கில்லை, அவர்களும்ஒப்புக்கொள்வதில்லை, மற்றவரும் அப்பட்டத்தைச் சூட்டிக் கொள்ளப் பார்சிகள் அருகதையற்றவர்கள் என்று கூறுகின்றனர், இனியார்தான் இந்தியர்? எங்கே காண்பது இந்தியனை? எங்கே இருக்கிறான் இந்தியன்? "இந்நிறத்தான் இவ்வண்ணத்தான் என்றுஎழுதிக்காட்டொணாதவனாகஇருக்கிறானே! சரி! இதோ சீக்கியர்உள்ளனர். அவர்கள் இந்தியரா என்று பார்ப்போம்! வீரமுள்ள கூட்டத்தினர், இந்தச்சீக்கியர். இவர்களின் குரு, நானக். இவர்சீக்கியமார்க்கத்தைவகுத்ததே, இந்துமார்க்கத்திலே காணப்படும் பார்ப்பன ஆதிக்கத்தை வெறுத்ததால்தான்! எனவே இந்துக்களென்று இவர்களைக் கூறமுடியாது. இவர்கள் நிலைஎன்ன? முஸ்லீம்களுக்குப்பாகிஸ்தான் தந்தால், எங்களுக்கு அகாலிஸ்தான் தரவேண்டும் என்று கூறுகின்றனர். இந்தியாவிலே, தாங்கள் ஓர் தனி இனம் என்று மார்தட்டுகின்றனர். முஸ்லீம்களிடம் நீங்காப்பகை கொண்டுள்ளனர். இஸ்லாமுமல்ல, இந்துமார்க்கமுமல்ல, இவர்களுடைய மார்க்கமே தனியானது. நடைநொடிபாவனை வாழ்க்கைமுறைகளும், வேறாகக்காணப்படுகிறது. இலட்சியமும் வேறுதான்! இவர்கள் இந்தியரா? எப்படி முடியும்? இவர்களை இந்தியர் என்றால், இவர்களினின்றும் முற்றிலும்வேறுபட்டுக்காணப்படும் மற்றவர்கள் யார்? எங்கே இந்தியன்! என்கண்களுக்குப் புலனாகவில்லை! நான் இந்தியா சென்றேன், இந்தியனைக் கண்டேனில்லை!

இது, நிக்கோலசின் கருத்து, தமது புத்தகத்திலே அவர்தீட்டி இருப்பது. இதிலே எது தவறு? நீங்களேதான் யோசித்துக்கூறுங்கள், யார் இந்தியன்?

(தொடரும்)

—:(0):—

### தஞ்சை

24—1—45ல் மதுரைத்தோழர் R. E. ராசன் தலைமையிற்கூடிய கூட்டத்தில் ந. வ. ரா. இளைஞர் சங்கம் என்பதைத் திராவிடர் கழகம் என மாற்றப்பட்டுக் கழகக்குழுவினர்களும் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

## ஆரியத்திராவிடக்கலப்பு

(அப்துல் மஜீத், ஆந்திரா பல்கலைக்கழகம்)

"இன்றை நாளில் இந்நாட்டில் வாழ்வோரை ஆரியன் என்றும் திராவிடன் என்றும் பிரிக்கவியலாது. ஏனெனில் பல்லாயிரமாண்டுகளுக்கு முன்னரே அவர்களுள் கலப்பேற்பட்டு விட்டது;" என்பது ஒரு சிலரின்கூற்று. இஃது சரியா என்பதை ஈண்டு ஆராய்வோம்.

திரை கடல் கடந்து வாணிபம் பெருக்கி வாகைசூடி, "தமிழன் தரணியில் எவருக்கும் தாழாதவன்," என்பதனை உலகிற்கு உணர்த்தி தலைநிமிர்ந்திருந்த காலை அவன்மீது ஆரியம் எனும் காமவல்லி குறுநகைநகைத்துக் கடைக்கண் பார்வையை வீசினாள். இரையானான் அவளுக்கு இவன். நாட்டையும் வீட்டையும் அளித்தான் நலம்பயக்கும் என்நம்பி! உள்ளத்தை உழுநில மாக்கிட உடன்பட்டான். கலைவித்தினைத் தூவினாள் அணங்கு! அந்தோ! இருண்டது வானம்; கார்மேகம் மின்னலெனக் கண்சிமிட்டியது, இடியெனச்சிரித்தது. ஆரியத்தால் அல்லலுற விருக்கும் வீரனைக்கண்டு! மாமழையும் பொழிந்தது! விதைத்த வித்தும வேரூன்றி, முளைகிளம்பி. செடியாகி, மரமாகி ஆதிக்கங்கொண்டது. தீங்கனி நல்குமெனநம்பியிருந்தாற்றமிழனின்நாவைப் பழுதாக்க, அத்தருநீய கனிகளையே கொடுத்தது. தீண்டாமையைப் பகுத்தியது! வேற்றுமையைப் பரப்பியது! பிரிவினையை ஊட்டியது!

நிலை கெட்டான், விதியால் அல்ல, மதிமயக்கத்தால். இதுவே தக்கதருணமென ஆரியம் எனும்கள்ளி இவனைக் கொள்ளையடித்தாள். பட்டம்பதவிகளைப் பறித்தனள்; தனம் படைத்திருந்த இவன் ஆரியத்திற்கு அடிமைப்பட்டு, ஆண்மையிழந்து, அரசிழந்து அல்லற்பட்டான். ஆனால்இந்நிலை எத்தனை காலம் நீடித்தது? செய்ததவற்றை தாமதமாக உணர்ந்தான். நிலைகண்டு கலங்கினான். ஆனால்உறுதிதளரவில்லை, உறங்கிக்கிடந்தவனைத் தட்டி எழுப்பிடும்வீரனும் தோன்றினான், வீறு கொண்டெழுங்களென வீரமுரசம் கொட்டினான். முரசொலி கேட்ட முத்தமிழ் மக்களின் மயக்கம் தெளிந்தது. அவ்வீரனின் தலைமையில், ஆரியத்தை அழிக்கப் போர் துவக்குவோம்; பஞ்சாங்கப்படையின் பலமொடுக்கி, பூர்ணய்யா போன்ற புல்லுருவிகளைக் களைந்து, வீர முழக்கத்துடன் பிரிவினைப் போராட்டத்தைத் துவக்கித் திராவிடத்திருநாடு அமைத்திடுவோம்," எனப் பெருமுழக்கம் செய்தனர். இதுதான் சேலம் மாநாட்டில் பெரியார் தலைமையில்கிளம்பிய ஒலி.

(10-ம் பக்கம் பார்க்க)

## ஆரிய திராவிடக்கலப்பு

9ம் பக்கத் தொடர்ச்சி

மாமரங்கள் நிறைந்த காடு. இடையே கள்ளிபடர்ந்துள்ளது. கொடியவிலங்குகளும், நச்சரவுகளும் நிறைந்துள்ளன. இத்தகைய வேண்டாக்கலப்புத்தான் தமிழருக்கும் ஆரியருக்குமிடையே ஏற்பட்டதெனநாம் கருதுகிறோம். இக்காட்டில் தான் நாம் வழிவகுத்துச் செல்ல வேண்டியுள்ளது. இதனைத்தான் சேலம் மாநாடு செய்துள்ளது.

இனித்தமிழன் யார், ஆரியன் யார் என்பதுகுறித்துச்சிறிது ஆராய்வோம். தமிழ்நாட்டில் பிறந்து தமிழ் மொழி பேசிடுவதால் மட்டும் ஒருவன் தமிழனாகி விடுவானா என்றால், "இல்லை," என்ற பதிலே நம்மிடமிருந்து கிடைக்கும். ஏன்? மணம்மிகுமலரின்மறைவிலிருந்து தீண்டிடும் நச்சரவென நம்முன் தமிழ்மொழி பேசி தமிழருக்கு இழுக்குக் கொண்டுவர முற்படுபவன் எங்ஙனம் தமிழனாவான்? உலகமக்கள் யாவரும் சமம் எனக்கருதிடும்தமிழரிடத்துப்,பிறப்பினால் உயர்வு தாழ்வு கற்பிக்க முற்படுவோன் எங்ஙனம் தமிழனாவான்? பிறமொழிச் சொற்களையும், புராணம், இதிகாசம் என்ற குப்பைகளின் கருத்துக்களையும் தமிழில் புகுத்திடுவோனைத்தமிழன்எனக்கூற எங்ஙனம் நாவெழும்? இகத்தையும் பரத்தையும் அறியாத்தமிழனிடத்து இகபரசுகம் பெறவழி காண்பிப்பேன் எனக்கூறி தமிழனின் குருதியையுறிஞ்சுவோனை எவரே தமிழன் என்பர்? ஒருக்காலும் கூறார். அத்தகையோனை ஆரியன் என்றல்லவோ அழைப்பர்.

## வாழ்த்துகிறோம்

21—2—45ல் சென்னை புரசவாக்கத்தில் தன்மதிப்பியக்கப் பெரியார் ஈ. வே. ரா. அவர்கள் தலைமையில் நமதியக்கத்தீவிர இளைஞரும், சிறந்த சொற்பொழிவாளரும்சென்னைப் பச்சையப்பன் கல்லூரித்தமிழ் ஆசிரியருமான தோழர் அன்பழகனுக்கும்தோழியர்வெற்றிச் செல்விக்கும் சீர்திருத்தத்திருமணம் வெகு சிறப்புடன் நடைபெற்றது. திராவிடத்தலைவர்கள் சண்முகம், லிங்கம் முதலியோரும், அண்ணாத்துரை,சனார்த்தனம் ஆகியோரும் இந்திராணி, பாலசுப்ரமண்யம், குஞ்சிதம் குருசாமி போன்ற பெண்மணிகள் பலரும் மற்றும் நமதியக்க அன்பர்களும்விஜயஞ்செய்து விழாவைச் சிறப்பித்தனர்.

மாலை செண்ட்மேரி மண்டபத்தில் மணமக்களைப்பாராட்டிப் பலதோழர்கள் பேசினர். மணமக்களுக்குப் பல சங்கங்கள்சார்பாக வழங்கப்பட்ட வாழ்த்துப் பத்திரங்கள் வாசித்தளிக்கப்பட்டன. அவர்களுக்கு நமது உளமுவந்த வாழ்த்தும் உரித்தாகுக.

## அனுதாபம்

திருச்சி மாவட்ட முஸ்லிம்சமூகத்தில் மிகமுக்கியஸ்தரும் முதன்மைவாய்ந்தவரும்,புதுக்கோட்டைத்தனியரசு உதவிநிர்வாக அதிகாரியுமான கான்பகதூர் பி. கலிபுல்லாசாகிப் அவர்களது இருகுமாரர்கள், மருத்துவக் கல்லூரியில் படித்து வந்த 22 வயதுடைய இஸ்மாயில் என்பவரும் அவரது இளவல் பி. ஏ. வகுப்பில் வாசித்து வந்த 18 வயதுள்ள மகம்மதலி என்பவரும் டைபாயிட்ஜுரம் காரணமாக இயற்கை எய்தினர் என்பது கேட்டு மிகவும் வருந்துகிறோம். ஒரு கிழமைக்குள்மிக இளம்வயதிலேயே இரு குமாரர்களைப் பிரிந்து வருந்தும் கான் பகதூர் அவர்களுக்கும் அன்னார் குடும்பத்தாருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## சேலம்

4—3—45ல் அம்மாப் பேட்டைப் பனகால் திராவிடர்கழகத்தின் சார்பாக நடந்தகூட்டத்தில் திராவிடர்கழகத்துக்கென ஒருதினசரித்தாள் நடத்துமாறும், தமிழ்த்திருநாளன்று திராவிட நாட்டில் வெளிவரும் பல உயரிய கருத்துக்கள் கொண்டகட்டுரைகளையும் மற்றும் பல நமதியக்க நண்பர்களின் அரியசெய்திகளையும் தொகுத்து மலர் வெளியிட வேண்டுமென்றும், இதை எல்லாத் திராவிடர்கழகங்களும் ஆதரிக்கவேண்டுமென்றும் தீர்மானங்கள்நிறைவேற்றப்பட்டன.

1—4—45ல் அம்மாப்பேட்டைத் தியாகராயர் வாலிபர்சங்கத்தின்ஆதரவில் தோழர் எஸ் எம், அர்த்தனாரி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தின் போது ஷை தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

## அழைப்பு

18—3—45ல் திருச்சிநகர்வாகனேரியில், தாழ்த்தப்பட்டோர் பொதுக்கூட்டம் நடைபெறும். அவ்வமயம் அகில இந்திய ஷெட்யூல்ட்கிளாஸ் பெடரேஷனின்கிளையாகத்திருச்சிஜில்லாவில்ஒன்று நிறுவப்படும், ஆகவேஇதனையே அழைப்பாகக்கொண்டு நம்ஜில்லாவிலுள்ள நம்மனைவரும் தவறாது வரும்படிக்கேட்டுக் கொள்கிறோம்.

M. இராமசாமி
M. பொன்னுசாமி
கன்வீனர்கள்

## பூந்தோட்டம்

26—2—45ல் இவ்வூர்த் திராவிடகழகத்தின் ஆதரவில் ஒடாக்கல்லூர் வை. இராமச்சந்திரன் தலைமையில் கூடிய கூட்டத்தில் பலதோழர்கள் திராவிடர் கழகத்தின் நோக்கங்களைப்பற்றி விரிவாகப்பேசினர்.

## திருச்சி

சிந்தாமணி ஆதித் தமிழ் மாணவர் கழகத்தின் 5—வது ஆண்டு நிறைவு விழா 24—2—45ம் நாள்தெப்பக்குளம் பிஷப் ஹீபர் உயர்நிலைப்பள்ளி மண்டபத்தில் திருச்சி நகராண்மைக்கழகஆணையாளர் திரு. து. பாலசுந்தரம் பி. ஏ, தலைமையில் நடைபெற்றது.

அதுகால் கரந்தைப்புலவர் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் திரு. கோ. சி. பெரியசாமிப்புலவர் "ஆதித் தமிழர்களின் பழங்கால—தற்கால நிலை" என்பதைப்பற்றியும் திரு. தி. பொ. வேதாசலம் அவர்கள் (ஆங்கிலத்தில்) ஆதித்தமிழ் மாணவர்களின் கடமையையும், ஹரிஜனஹாஸ்டலின்கொடுமையைப் பற்றியும், அர்ச். சூசையப்பர் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர். ரம்போலா மஸ்கரனஸ், எம். ஏ., "தமிழை வளர்க்கும் வழி"என்பதைபற்றியும், தி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் "தீண்டாமை இந்நாட்டில்புகுந்த விதத்தைப்"பற்றியும், தேசீய யுத்த முன்னணி உதவிச் சொற்பொழிவாளர் வி. வீராசாமி பி.ஏ., அவர்கள் "யுத்தமும் ஆதித் தமிழர்களின் கடமை" என்பதைப்பற்றியும் மிகவிரிவாகப் பேசினார்கள்.

தலைவர் முடிவுரைக்குப்பின் வந்தனோபசாரம் கூற விழா இனிது முடிவுற்றது. விழாவிற்கு இந்தியத் தொழிற்கட்சிபொதுக்காரியதரிசி திரு. கார்னிக் அவர்களும், இந்தியத்தொழிற்கட்சி சபைஅங்கத்தினர் திரு. வி. ஜி. குல்கர்னி அவர்களும் வந்திருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

6—3—45ல் ஓட்டக்குடியில் தோழர் எஸ். அகிலாண்டம் தலைமையில் நடந்த கூட்டத்தின்போது தோழர் S. சோமசுந்தரம் திராவிடநாடு என்பதுபற்றிப் பேசியபின் கழகக்குழுவினர்களும்தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## பிறப்பு

கரூர்தோழர் எல்.திராவிடமுத்துபழனியம்மாள் அவர்களின் ஆண்மகவுக்குத் "திராவிடமணி" என்ற பெயர் சூட்டிய தன் அறிகுறியாகத் திராவிடநாடு மடலுக்கு ரூ 1. அன்பளிப்புதரப்பட்டது.

திருச்சித்தன் மதிப்பியக்கத் தம்பதிகளான டி. பி. முத்துச்சாமி சோதியம்மைக்கு சென்ற 17—2—45ல் ஓர்ஆண் மகவுபிறந்தது தாயும்சேயும்சுகம். இதன் நினைவுக்குறியாகத் திராவிடநாடு இதழுக்குரூ.1,நன்கொடையளிக்கப்பட்டது.

—:(0):—

## உவமை நயம்

2-ம் பக்கத் தொடர்ச்சி

ரூல் மனம் ஏங்காதா? அந்நிலை எப்படி இருக்கும்?

அறுசுவை அன்னம் எதிரே இருக்கிறது. ஆனால் அதைச் சாப்பிடக்கூடாது என தடைவிதித்து விட்டால் ஒருவனது துடிப்பு எவ்விதம் இருக்கும்?

'உண்ணும் அமுதிருந்தும்—எதிர்
உண்ண முடிவதில்லை.
தண்டமிழ்ப் பாட்டிருந்தும்—செவி
சாய்த்திடக் கூடவில்லை!

'கன்னியும் பாலைபோல் கண்ணீர்விட்டுக் கடல் நீரில் சுறாப்போலப் படுக்கை தன்னில் துள்ளி உடல் துவள்தலின்றிக் கிடக்கிறாள். அவள் உயிர்பிரிந்துவிடுவது உறுதியாம். எப்படி? பூ பழசானால் உதிர்கிறது. செடியில் அமர்ந்து பின் எழுந்தோடுகிறது சிட்டு. கிளியும் அப்படித்தான். அவள் உயிருக்கும் அதே கதிதானாம்.

'செழுங்கிளையில் பழம்பூப்
போல் புதரில் குந்தும்
சிட்டுப்போல், தென்னையிலே
ஊசலாடி
எழுந்தோடும் கிள்ளைபோல்,
என துடம்பில்
இனிய உயிர் ஒரு கணத்தில்
பிரிதல் உண்மை!'

காதலியிடமிருந்து கடிதம் வருகிறது. வாசிக்கவா செய்கிறான்? பார்வையால் விழுங்குகிறான். கவிதையைக் கவனியுங்கள்:

'தணலிலே நின்றிருப்போர்
தண்ணீரில் தாவுதல் போல்
எழுத்தினை விழிகள் தாவ
இதயந்தால் வாசிக்கின்றான்'

அவசரமும், துடிப்பும் தொனிக்கிறதல்லவா?

காதலிக்கு வீட்டிலே கட்டுப்பாடு அதிகம். அவள் நிலையைச்சித்தரிக்கும் சொற்களிலுள்ள உவமை இதயத்தைத்தொடுகிறது:

'ஈ முடித்த தேன்கூட்டை வடித்தல் போல எனை வருத்தாதீர்' 'ஆலையிட்ட கரும்பாக்கி உலக இன்பம் அணுவளவும் அடையாமல் தவிக்கிறாள். 'காய்ச்சிய இரும்பு காதலால் தேகம்' அவளது. அதை ஆற்றும் 'குளிர் புனல்ஓடை' அவள் அன்பன். அவனைப்பார்க்கிறாள். ஆவலுடன் வருகவருக என்றழைத்தாள். அவள் கைஅசைந்தது 'செந்தாமரைஇதழ்தான் தென்றலால் உதறல் போல'

இன்பவிளைவான முத்தம்இடுதலை எத்தனை விதமாகச்சித்தரிக்கிறார் கவிஞர்! ஒவ்வொன்றிலும் ஓர் நயம்.

'இதழ் நிலத்தில் கன உதட்டை
ஊன்றினான், விதைத்தான் முத்தம்'
'மாரோடணைத்து மணற்
கிழங்காய்க் கன்னத்தில்
வேரோடு முத்தம் பறித்தான்'

அவ்வளவு தானா?

அவள் கன்னம் தமிழ்ச்சுவடி. அங்கே ஊறும் கவிதையை அவன் ரசிக்கிறான் எப்படி?

தாமரை போய்ச் சந்தனத்தில்
புதைந்ததைப் போல்,
தமிழ்ச் சுவடிக் கன்னத்தில்
இதழ் உணர்வை
நேமமுறச் செலுத்தி
நறுங் கவிச் சுவைகள்
நெடு மூச்சுக் கொண்டமட்டும்
உறுஞ்சி நின்றான்!

இன்னும் ஒருசிறு நாடகம். முத்தமே அதன் முடிவு. 'குடும்பவிளக்கான மங்கை நல்லாள் கணவனுக்கு வெற்றிலைச்சுருள் மடித்து—முன்நீட்டுகிறாள். ஆனால் அவள் மனமோ சுருளை அவன் மலர் வாயில்தர நினைக்கிறதாம்! அவன் கேட்கிறான் 'சுருளுக்கு என்ன விலை'' என்று?

'பொருளுக்குத்தக்கதுபோலும்'என்று அவள் சொல்லவும் 'கையில் கொடுப்பதைக்காட்டிலும் சுருளை வாயில் கொடுத்திடு மங்கையே!' எனக்கொஞ்சுகிறான். அவள் தயங்கவா போகிறாள்? அன்புடன் செங்கைஉயர்த்தினாள். மின்வீச்சுமுத்தம்! அதன் சுவை என்ன?

'துடித்தனப் பயனைக்
கூட்டி எடுத்து
வடித்த சுவையினை
வஞ்சிக்கு அளித்தல்போல
தளிர்க்கைக்கு முத்தம் தந்து
துவர் வாய் வெற்றிலை
குழைய ஏகினனே!'

இவ்வளவு அன்பு பெருக்கும் காதலி இடும் வேலை எப்படி இருந்தால்தான் என்ன! அவன் மலைப்புறுவானா? 'இட்டற்கரிய காதற் கிழத்தி இடும் வேலை விட்டெறிந்த கல்லைப்போல் மேலேறிப்பாயாதோ!' என்பது உவமை.

அன்பு விளையாட்டை அவள் தடுத்துவிட்டால் அவன் பொறுப்பது கஷ்டம் தான். 'கட்டமுதை நான் பசியோடுண்ணப்போம் போது நீ ஓர் தட்டுத்தட்டிவிட்டாய்! தாழச்சுடு வெயிலில்தாளாமல் நான் குளிர்ந்த நீழலைத்தாவும்போது நில் என்று நீ தடுத்தாய்' என்று கவி காதலன் மனோ நிலையைப் படம் பிடித்துக் காட்டுவதில் உள்ள உவமையை ரசித்துத் தான் ஆகவேண்டும்.

—:(o):—

## ஏ! அப்பா!!

"எக்காரணத்தைக்கொண்டும், நான் பாகிஸ்தானை ஆதரிக்கமுடியாது" என்று—சர். சி. பி. இராமசாமி ஐயர், சர். சப்ரூ கமிட்டியினரின் கேள்விக்கு அளித்தபதிலில் எழுதிஇருக்கிறார்.

ஏ அப்பா! அவ்வளவு கண்டிப்பாகவா திவான்ஜீ கூறிவிட்டார், என்று நமது ஆபீஸ் பையன், ஆச்சரியப்படுகிறான். "இதிலென்னடா தம்பீ ஆச்சரியம்? முசிரி சுப்பிரமணிய ஐயரின் மூக்குக்கானத்தை அவரால் விடமுடியுமா? பாபநாசம்சிவத்தின் பாட்டுக்கச்சேரியின்போது, "முகபாவம்" பதினாறும் நாளிலே இருப்பது போல உள்ளதைத்தான் அவரால் மாற்றிக்கொள்ளமுடியுமா? அவரவரின் இயல்பு எப்படிமாறும்? மாறாது, மாறாது" என்று இசைஉணர்வுடன்கூடின ஒரு தோழர் பையனுக்குப்பதிலுரைத்தார்.

வீதியிலே சிறுகூட்டம் "அடேஅப்பா அலங்கோலமாக இருக்கே. துணியைக் கட்டிக்கொள்ளடா" என்று கெஞ்சுகிறார்கள், ஒருவனிடம், அவன் "முடியவே முடியாது" என்று முரட்டுத்தனமாகப் பேசுகிறான். என்னவிஷயம் என்றுவிசாரித்தேன், அவன்பைத்யக்காரனாம். "பித்தம்தெளிவதும் கஷ்டம், சுபாவம் மாறுவதும் கஷ்டம்" என்று கொஞ்சம் வேதாந்த விசாரணையுள்ள ஒரு நண்பர் கூறுகிறார்.

"ஆமாம் சார் பாகிஸ்தானை! ஆதரிக்கவே முடியாதுஎன்றுஇவர்பேசுகிறாரே, யார் இவரை ஆதரிக்கச்சொன்னார்களாம்?" என்று கேட்கிறான் ஆபீஸ் பையன்.

"போடா, நல்லகேள்வி கேட்டுவிட்டாய்?" என்றுகூறி அவன்வாயைஅடக்கிவிட்டேன். பால்போல நிலவு கண்டு, பார்த்துரசிக்காமல், அது தெரியாவிட்டால்படுத்துஉறங்காமல், பலங்கொண்டமட்டும், பைரவமூர்த்தி சத்தம்செய்கிறாரே, யார்கண்டார்கள் காரணத்தை!

—

## மறைவு.

சென்னைப்பிரபலவழக்கறிஞரும், வாக்குவல்லவருமான திரு. நியூஜண்ட்கிராண்ட் அவர்கள் 2—3—45ல் காலமானார்.

—

திருச்சியிலும் சென்னையிலும் திராவிடர் இயக்கத்திற்கு அரியதொண்டாற்றியவரும் நீண்டநாளையச் சுயமரியாதைக்காரருமான தோழர். ச. ஆரோக்கியசாமி 25—2—45ல் இயற்கை எய்தியதுபற்றி சென்னை முத்தியாலுப் பேட்டைத்திராவிடர்கழகத்தார் தங்கள் ஆழ்ந்த அனுதாபத்தை அறிவித்துக் கொள்கின்றனர்.

## 'அம்பேத்கார் இல்லம்'

——

திருச்சி ஹரிஜன ஹாஸ்டலினின்றும் கல்லூரிவகுப்பு மணவர்கள் 15பேரும் ஹைஸ்கூல்பள்ளி மாணவர்கள் 20பேரும் விளக்குமாறு வாங்கிவர மறுத்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு விரட்டிடப் பட்டனர். அதனால் அம்மாணவர்கள் உணவின்றி வாடுகின்றனர். மேலும் வருடாந்தரப் பரீட்சைச் சமயத்தில் அவர்களை வெளியேற்றியது அதி அநீதியென காரியதரிசி எல். என். கோபால்சாமி அய்யரிடம்தோழர் ஆர். எஸ். மலையப்பன் அவர்கள்சொல்லிச்செய்தமுயற்சிகள் அனைத்தும் பயனற்றுப்போய்விட்டன. இதுபற்றி அரசாங்கத்தாருக்கும் அம்பேத்கார் அவர்களுக்கும் செய்திகள் அனுப்பப்பட்டன. என்ற விஷயங்கள் யாவும் யாவரும் அறிந்ததே இந்த நிலைமைக்குப்பிறகு இதன் விளைவாகஇப்போது திருச்சியிலேயே அம்பேத்கார் இல்லம்" என்ற மற்றொருவிடுதி அமைக்க அரசாங்கத்தார் ஆதரவு தந்துள்ளார்கள். அதுபோல் திராவிடப் பொதுமக்களும் அதற்குத் தங்களாலியன்ற பொருளுதவி செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறோம். இவ்வுதவிவெறும் உணவுவிடுதிக்கு மாத்திரமல்ல, பல்ஏழைஆதித்திராவிடமக்கள் அவ்விடுதியில் உணவுகொண்டு உயரியகல்விபயிலவும் உபயோகப்படுகிறது என்பதும் கவனிக்கப்பட வேண்டியது அவசியமெனவும் அறிவிக்கிறோம். அன்பளிப்பு தருபவர்கள்

அம்பேத்கார் இல்லம்,
தெப்பக்குளம், P. O.
திருச்சி.

என்ற முகவரிக்கு அனுப்பவும்.

## மறுமணப்பெண்தேவை

சோழிய வேளாள மரபைச்சேர்ந்த கௌரவம் வாய்ந்த மிராசுதாரரும், நாற்பது (40) வயதுடையவரும், ரூ. 20,000 (இருபதினாயிரம்) ஆஸ்தியும், மாதமொன்றுக்கு ரூ. 75 (எழுபத்தைந்து) வருமானமுடையவரும், ஒழுக்கத்தில் சிறந்தவரும், தமிழ்க் கல்வியறிவுடையவரும், அநேக துறைகளிலீடுபட்டுப்பலநற்சாக்ஷிப்பத்திரங்கள் பெற்றவருமான, சுயமரியாதை இயக்க அன்பரொருவருக்கு மறுமணப் பெண் தேவை.

மறுமணப்பெண் முப்பது(30)வயதிற்குட்பட்டவராயும், போதிய கல்வியறிவுடையவராயும், உடல் நலமுள்ளவராயும் இருத்தல் வேண்டும்.

இயலுமேல் உருவப்படத்துடன் கீழ்க்கண்ட முகவரிக்கு வரையவும்,

C/o இரா. நாவலடி,
செயலாளர்,
திராவிடர் கழகம்,
வேலூர் (சேலம்,)

——

## திருமணம்

சென்னைத் "தமிழ்உலகம்" ஆசிரியர் தோழர் டி. எம். பார்த்தசாரதியாரின் செல்வி டி. பி. இராஜேஸ்வரிக்கும் திரு. சுப்ரமண்யமுதலியார் செல்வன்முத்துக் குமாரச்சாமிக்கும் 1—2—45ல் திரு. வி. க. அவர்கள்தலைமையில் தமிழ்த்திருமணம் இனிது நடந்தது.

## காரைக்குடி

இராமநாதபுரம் மாவட்டத் திராவிடர் கழக முதலாவது மாநாடு 8—4—45ல் ஷை யூர் கிருஷ்ணா டாக்கீசில் நடைபெறும்.

## சர்க்கார்

பேரேடு.

இந்திய சர்க்காரின் வரவு செலவுக் கணக்குபற்றி, நிதிமந்திரி கூறியிருப்பது.

எதிர்பார்க்கப்படும்
செலவு:— 517.63 கோடிரூபாய்
எதிர்பார்க்கப்படும்
வரவு:— 353.74 ,,

துண்டு விழுவது: 169.89 ,,

தந்தி:—"புறமார்க்" திருச்சி.







கைதேர்ந்த ஆட்களைக்கொண்டு தயாரிக்கும்

# கிளி மார்க் பட்டணம் பொடி.

தென்னிந்தியா எங்கும் புகழ்பெற்றது. காரம், மணம், திறம், வாடை கமழும்,
எமது கிளிமார்க் பட்டணம் பொடியை உபயோகியுங்கள்!
ஒருமுறை உபயோகித்தால் என்றும் நீங்காது ஞாபகம்.

விலை விபரம்:— நீ-1. பவுன்கலர் வீசை 1-க்கு ரூ. 10—0—0.
நீ-1. கருப்புநிறம் வீசை 1-க்கு ரூ. 9—0—0.

ஏஜண்டு இல்லா ஊர்களில் ஏஜண்டு தேவை.

ஏ. எஸ். ராஜன் கம்பெனி,
பழையவண்ணாரப்பேட்டை சென்னை.

Edited Printed and Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press,
317—319 Hodgsonpet Conjeeveram